Registered No. M. 878

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 7 } 1916-ம் ௵ ஜுலை ௴ / நள ௵ ஆனி ௴ { பகுதி 3

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

# பொருளடக்கம்.
# (CONTENTS.)

பக்கம்.

1. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் 81
From the Editor—R. Rangaswamy Iyer.

2. மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் 89
Meerabai—R. Sreenivasa Iyer.

3. பிரஹ்மஞான ஸபையின் அறைகள் (ஸி. ஜீ.)
—ஆர். பஞ்சாபகேச ஐயர் 95
Our lodge-rooms (C. J.)—R. Panchapagesa Iyer.

4. கீதா வாக்கியங்கள்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் 99
Geetha Slokas—R. S. Narayanaswamy Iyer.

5. வைசாக பௌர்ணமி—B. S. ராமசுப்பையர் 104
Vaisakha Full moon—B. S. Ramasubbier.

6. பரோபகாரம்—ஆர். பஞ்சாபகேச ஐயர் 108
Service—R. Panchapagesa Iyer.

7. மிகச்சிறு குழந்தைகட்கு பிரஹ்மஞானம்
—குமரப்ப செட்டியார் 115
Theosophy for very Little Children
—Kumarappa Chettyar.

8. புத்தகவரவு (Review of Books) 119

9. பத்திரிகை வரவு (Review of Journals) 120

## தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

1. மாதுஸ்ரீ அநிபெஸண்ட் அம்மையார் சரித்திரம் (படத்துடன்) 0—1—0
2. மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் 0—1—0
3. எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் 0—1—0
4. காயத்ரீ 0—1—0
5. காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழ்மொழி பெயர்ப்பும்) 0—1—0

மேற்கண்ட புஸ்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மஞான ஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

# பூர்ணசந்திரோதயம்.

| தொகுதி 7 | 1916-ம் ௵ ஜுலை ௴<br>நள ௵ ஆனி ௴ | பகுதி 3 |
| --- | --- | --- |

## தற்கால நிலைமை.

சென்ற ஜூன் ௴ மத்தியில் தஞ்சை நகரத்தில் 15 வயதுள்ள ஒரு பிராமணப் பெண்பிள்ளை தான் கிறிஸ்தவ மதத்தின் சார்பாயிருப்பதாயும், அதனால் ரெவரண்டு ஞானப்பிரகாசம் என்ற பாதிரியின் வீட்டில் படிக்க விரும்பியிருப்பதாயும் சொல்வதாய் பத்திரிகைகள் மூலமாய் தெரியவந்தது. அதற்குக் காரணமென்னவென்று வினவ, அந்தப் பெண் கிறிஸ்தவ பள்ளிக்கூடத்தில் படித்ததுதான் காரணமென்று துலங்கிற்று. அந்தப்பெண் மிகவும் புத்திசாலியாய் கேட்ட கேள்விகளுக்கு தகுந்த பதிலளித்தனள். ஆனால் தான் பிறந்த மதமாகிய இந்து மதத்தின் சம்பந்தமாய் அம்மாதுக்கு யாதொன்றும் தெரியவில்லையாம். கடைசியில் மதராஸிலிருக்கும் விதவாலயத்துக்குப்போய் அங்கு இருக்க சம்மதித்தனளாம். இந்தச் சிறிய சமாசாரத்தைப் பற்றிக் கொஞ்சம் ஆலோசனை செய்யின் நம்முடைய மனதில் உதிக்கும் எண்ணங்கள் எண்ணிறந்தன.

முன் காலத்தில் சீதை, சாவித்ரீ, கார்கி, மைத்ரேயி முதலிய ஸ்திரீ ரத்தினங்களை ஈன்ற இந்த பாரதவர்ஷத்தில் குழந்தைகளுக்கு, அதிலும் பெண் குழந்தைகளுக்கு, நம்முடைய உத்கிரந்தங்களினின்று நம் முன்னவர்களின் கதைகளையும் அவர் தம் அற்புதச் செயல்களையும் போதித்து நாமும் அத்தகைய நற்குணங்களை யடைய வேண்டுமென்ற அவாவை அக்குழந்தைகளிடம் உதிக்கும்படி செய்யவேண்டுவது நம்மவர் கடமையல்லவோ? நம்முடைய பையன்கள்தான் வயிற்றுருத்திரத்தால் எந்தப் பள்ளியாயினும், ஆங்கிலம் கற்பித்து பரீக்ஷை தேறச்செய்தால்போதுமானது என்று பாதிரிமார்களால் மதாந்தரத்தில் பிரவேசிக்கச் செய்யவேண்டுமென்றேஸ்தாபிக்கப்பட்டகிரீஸ்தவகலாசாலைகளில் சேருகிறார்கள். அப்படிச் சேர்ந்தபின்னர் ஒருசிலர் கிரீஸ்தவர்களாக மாறுகிறார்கள். நெருப்பில் கைவைத்தால் சுடும் என்று தெரிய வேண்டுவது அவசியமானாலும் நெருப்பு சுட்டபிறகுதான் அந்த தத்துவத்தை நன்கு உற்றுணருகிறமாதிரி, நம்மவர் அவ்வவ்விடங்களில் கொஞ்சம் சுறுசுறுப்புடன் புதிய கலாசாலைகளைத் தாபித்திருக்கின்றனர். ஆனால்இம்மாதிரி ஜில்லாக்கள்தோறும் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலைகள் போதுமானவளவு மூலதனங்களுள்ளவையாகவும் நல்ல அழகான கட்டிடங்களுள்ளவையாகவும் இருக்கின்றனவென்று நாம் சொல்ல இடமில்லை. இந்நாளில் இந்தியாவில் கிளம்பியிருக்கும் அற்புதமான கிளர்ச்சியானது இந்தக் குறைவை சீக்கிரம் தீர்க்கும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

***

இந்திய புருஷர்களைவிட ஸ்திரீகள் தேவதா பக்தியும் மாதிருபூமி விசுவாசமும், தன்னயம் பாராட்டாச் சீர்மையும், பொறுமையும் பொருந்தியவர்கள். பெரும்பாலும் நம் வாலிபப்புருடர்களைக்காட்டிலும் நமது பெண்மணிகளுக்கு புராதன கதைகளும், ராமாயண, பாரதாதி கிரந்தங்களில் சொல்லப்பட்ட சரித்திரங்களும் அதிகமாய்த் தெரிந்திருக்

கின்றன. நம் பெண்குழந்தைகளைப் பாதிரிமார்களால் ஸ்தாபிக்கப்பெற்ற பள்ளிகளுக்கு அனுப்புவதால் என்ன தீங்கு விளைகின்றதென்று நம்மவர் நன்றாய் ஆலோசிக்கின்றார்களா? அவர்கள் ஆலோசிக்காமலிருந்தால் அவர்களுடைய அறிவீனத்தை எங்ஙனம் நம்புவது? ஆலோசித்தறிந்தும் சும்மாவிருந்தால் அவர்களின் அசிரத்தையையும் சோம்பேரித்தனத்தையும் எங்ஙனம் மன்னிப்பது?

***

இயேசு, பேதுரு, மத்தேயு, யோவான், என்றால் தெரியும், ராமன், ஸீதை, கிருஷ்ணன், ருக்மிணி, அர்ஜுனன் என்ற நாமங்கள் கேட்டதில்லையேயென்று நம் சிறுமிகள் சொல்லுதற்கு நாம் காரணமாயிருப்பது அழகா? எங்கு பார்த்தாலும் கூட்டங்கள்கூடி பெண்கல்வி அவசியம்என்று பேசினால் போதுமா? பசித்தவனுக்கு அன்னம், அன்னம் என்று நாமஸ்மரணம் செய்தால் பசிதீருமா? காரியமல்லவோ வேண்டும்?இம் மதுரை மாநகரத்தில் ஸ்திரீகளுக்கென்று நம்மவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீமீநாக்ஷீ வித்யாசாலையைத் தவிர மற்ற ஏதாவதொரு பள்ளிக்கூடத்தை நம்மவர் ஏற்படுத்தவில்லையே. பணத்திலும் செல்வாக்கிலும், மதியூகத்திலும் மிகுந்த அறிஞர்கள் வசிக்கும் தானப்பமுதலி அக்கிரகாரத்தில் ரோமன் பாதிரிமாரால் ஸ்தாபிக்கப்பெற்ற பெண்பிள்ளைப் பள்ளியல்லவோ யிருக்கின்றது' அதில் பயிலும் சிறுமிகள்பெரும்பாலும் பிராமணப் பிள்ளைகளன்றோ?மேலும் புதுத்தெருவில் ஒரு புதுப் பெண்பிள்ளை பாடசாலை ஏற்படுத்துவது முடியாத காரியமா? அமெரிக்கன பாதிரிமார்களால் ஸ்தாபிக்கப்பட்ட பெண் பாடசாலைகள் எத்துணையோ யிருக்கின்றன. அமெரிக்கன் காலேஜில் சில வருஷங்களுக்கு முன்னே ஒரு பெரும் கூட்டத்திலே அன்னவர் வித்தியா விஷயமாய் இந்நகரில் செய்திருக்கும் பெரும் முயற்சிகளைக் காட்டக்கூடிய பெரியபடத்தை பிரசுரம் செய்தார்கள். அதை நாம் பலர் பார்த்தபோது நம்முடைய முயற்சியின்மையை யிகழ்ந்து அன்னவர் சுறு

சுறுப்பையும் விடாமுயற்சியையும் மெச்சினேம். இருந்த போதிலும் இவ்விஷயத்தில் நம்மவர் ஒருசிறிதுகூட பிரயத்தினம் செய்ததாகப் புலப்படவில்லை.

***

இந்தியா முழுதிலும் புத்திசாலித்தனத்தில் மிக்கதாகிய தஞ்சாவூர் ஜில்லாவின் தலை நகரத்தில் இந்துச் சிறுமிகள் பாதிரிமார்கள் பள்ளிக்குப் போகவேண்டிய ஆவசியகம் இருத்தல் பொருத்தமில்லை. இனிமேலாவது பற்பல நகரங்களிலும் கிராமங்களிலும் நகரங்களின் பற்பல வீதிகளிலும் இந்துப்பெண் பாடசாலைகள் ஸ்தாபித்து, பாதிரிமார்கள் பள்ளிக்கு குழந்தைகளே போகாதபடி செய்ய நம்மவர்கள் முன்வருவார்கள் என்று எண்ணுகிறேம்-ஒரேமொத்தமாக பெருந்தொகைகிடைப்பதரிது. ஆனல் சிறுஇடத்தை வாடகைக்காவது அல்லது இனமாகவாவது வாங்கி அதில் கூரையிலோ ஓட்டினலோ சிறு கட்டிடம் கட்டி பள்ளிகள் ஸ்தாபிப்பது சிரம சாத்தியமன்று. மனமிருந்தால் இது வெகுசீக்கிரம் கைகூடும்.

***

இந்த பிரகிருதத்தில் ராமநாதபுரம் ஜில்லா வத்திராயிருப்பு கிராமத்தில் பிறந்து தற்போது சென்னையில் ஹைகோர்ட்டு வக்கீலாயிருக்கும் பிரஹ்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் அவர்கள் செய்த கைங்கர்யம் பாராட்டற்பாலது. சில வாரங்களுக்கு முன்னர் ஐயரவர்கள் வத்திராயிருப்பில் பெண் பிள்ளைகளுக்கு பள்ளி யில்லாமலிருப்பதைப் பற்றி அக்கிராமத்தில் பிரஸ்தாபித்ததில், அவர்கள் கிராமத்தில் ஒத்துவரமாட்டார்கள் என்றும், தங்களால் முடியாதென்றும் பல வழக்கமான இடையூறுகளைக் கிளப்பினார்கள். ஆனல் கொஞ்சம் விடாமுயற்சியுடன் வேலைசெய்ய ஒரு பள்ளியையும் ஸ்தாபித்து அதற்கு கொஞ்சம் மூலதனமும் ஏற்படுத்தியிருப்பதாய்க் கேட்க மிகவும் களிக்கின்றேம். இது வல்லவோ விடுமுறை நாளைக் கழிக்கும்முறை.

ஸர் சங்கரன் நாயரவர்கள் இந்தியா கவர்னர் ஜனரல் சபை மெம்பராகி வித்யா இலாகா சம்பந்தமான உத்தர வாதத்தை வகித்தார்கள். ஸ்திரீகள் வித்யாபிவிருத்தியை புத்தேசித்து என்ன சீர்திருத்தங்கள் செய்யலாம் என்று முக்கிய ஜனங்களுடையவும், முனிசிபாலிடி தாலூகாபோர்டு ஜில்லா போர்டுகளுடையவும் அபிப்பிராயங்களைக் கேட்டிருக்கிறார்கள். அந்த சபைகளும் நன்கு ஆலோசனைசெய்து தங்கள் அபிப்பிராயங்களைக் கொடுத்து வருகின்றன.

* * *

ஸ்திரீகள் கல்வி விஷயமாய் முக்கியமாய் நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால் இந்தியஸ்திரீகள் படிக்கும் பாடசாலைகள் இந்தியர்கள் ஆளுகைக்குள் ளிருக்கவேண்டும். இந்தியர் நோக்கங்களுடன் அநுதாபமுள்ள இதரர்களுடைய உதவியைக்கொள்ளலாம். அவர்களுடைய அபிப்பிராயங்களையும் அறிந்து ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் முற்றிலும் இந்தியர்களே இந்தியஸ்திரீகளின் வித்யாசாலைகளின் நிர்வாகத்தை ஏற்கவேண்டும். மாணாக்கர்களின் மதசம்பந்தமான போதனைக்கு ஒரு உபாத்தியாயர் ஏற்படுத்தவேண்டும். ஸநாதந தர்ம முதல்பாடப் புத்தகத்தில் கண்ட தத்துவங்களை தகுந்த ஒரு உபாத்தியாயரைக் கொண்டு கற்பிக்கவேண்டும். இந்து ஸ்திரீகள் பிராசீன தர்மங்களை அறியும்படி போதிக்க வேண்டும். மேனாட்டாருடைய பகட்டான வெளிப்படையான சில வழக்கத்தை மட்டும் விசேஷமாய் அநுசரிக்காமல் அவர்களிடமிருக்கும் முக்கியமும் சிலாக்கியமுமான நல்ல வழக்கத்தை மட்டும் தெரியும்படி கற்பிக்கவேண்டும்.

* * *

இந்தியா கவர்ன்மெண்டாரால் இலாகா கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயத்துக்காக அனுப்பப்பட்ட மற்றொரு விஷய மென்னவென்றால், வைத்திய வித்யா சாலை

ளில் ஆங்கிலத்தில் கற்பித்தலைக்காட்டிலும் ஆங்காங்குள்ள ஜனங்களின் தாய்பாஷையில் கற்பித்தல் நன்மை பயக்குமா வென்பது. சாதாரணமாய் ஒவ்வொருவரும் எண்ணும் எண்ணங்கள் தாய் பாஷையில்தான். அப்படி எண்ணும் எண்ணங்களை ஆங்கிலத்தில் வெளியிடவேண்டி யிருக்கின்றது. அல்லது பெரும்பாலும் இதரர்கள் ஆங்கிலத்தில் சொல்லுவதை தாய் பாஷையில் மொழிபெயர்த்துத் தான் உணருகிறோம். ஆனால் பெரும்பாலர் விஷயத்தில் இந்த மொழிபெயர்த்தலானது அதிசீக்கிரத்தில் நடப்பதால் அதனால் ஏற்படும் சிரமத்தை நாம் அறிகிறோமில்லை. உண்மையாய் ஆங்கிலத்தில் கற்க முயலும் விஷயத்தை தாய் பாஷையில் கற்க முயன்றால் பாதிகாலத்தில் கற்றுவிடலாம் என்பது திண்ணம். இந்த உண்மை பிரகிருதிசித்தமாயினும் தற்போது நமது ராஜதானியில் நடக்கும் வழக்கத்தை உத்தேசித்து வற்புறுத்துவது அவசியமாயிருக்கின்றது. வங்காளத்திலும் மஹாராஷ்டிரத்திலும் இருவர் சந்தித்தால் தங்கள் சுயபாஷையில் சம்பாஷிக்கிறார்களே யொழிய ஆங்கிலத்திலில்லை. அப்படிப்பேசுவதிலும் மணிப்பிரவாளமாய் ஆங்கில மொழிகளைக் கலக்காமலே பேசுகிறார்கள். ஆனால் நம் தென்னிந்தியாவிலோ இருவர் சந்தித்தால் பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் பேசுகிறார்கள். ஒருக்கால் தமிழில் பேச முயன்றால், ஆங்கிலச் சொற்களினிடையே தமிழ்ச் சந்திகள் மட்டுமே பிரயோகிக்கப்படுகின்றன. இது நமக்கு அழகல்ல. தாய் பாஷைக்கும் கௌரவமில்லை. பள்ளிக்கூடங்களில் நாம் கற்கவேண்டியதெல்லாம் நமது சுவபாஷையிலேயே உபாத்தியாயர் கற்பித்தால் வீட்டிலும் வெளியிலும் அதை இகழமாட்டோம். மேலும் இப்போது படிக்கும் மாணாக்கர்களைத் தவிர பன்மடங்கு அதிகப்பேர்கள் படிக்க முன்வருவார்கள். சிலகாலம் சுவபாஷையில் கற்பிக்கக்கூடிய உபாத்தியாயர் கிடைப்பது அரிதானாலும் கொஞ்சம் சிரமப்பட்டால் உபாத்திமார்கள் கற்பிக்கும் சக்தியை சம்பாதிப்பார்கள். அறிவும் நாட்டில் பரவும். அதுதான் நாம் முக்கியமாய் கோரவேண்டியது.

நமது பிரம்மஞான சபை கான்பரென்சுகளில் செய்யப்படும் பிரஸங்கங்களில் ஆங்கிலத்தைசுவ பாஷையாயுடையவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை நாம் எல்லோரும் சந்தோஷமாய்க் கேட்கிறோம். ஆனால் நம்மவரில் பலர் ஸ்வபாஷையில் பேசமுடியாமல் ஆங்கிலத்தில் பேசும்போது அவர்களும் தங்கள் அபிப்பிராயங்களை நன்றாக வெளியிட முடியவில்லை. கேட்போரும் அவ்வளவு நன்றாக அறிய முடியவில்லை. ஆனால் கொஞ்சம் நன்றாக ஸ்வபாஷை பழகியவர்கள் அப்பாஷையில் எவ்வளவு லளிதமாயும் சுலபமாயும் அழகாயும் பேசுகிறார்கள் என்பதையும், கேட்போர் சொல்வதை எவ்வளவு சுலபமாய் கிரகிக்கிறார்கள் என்றும் எல்லோரும் அறிவோம். மேலும் பிரஹ்மஞான கிளைச் சங்கங்களில் தமிழர் மட்டுமே நிறைந்த சங்கங்கள் வரவரஅதிகரிக்கின்றன. ஆகையால் நம்மவர் அனைவரும் தமிழில் பேசவும் எழுதவும் நன்கு பழகவேண்டும். ஆனால் சபையில் உள்ளோர் ஓரேபாஷையை அறியாதாராயிருந்தால் ஆங்கிலத்தில் பேசுவது அவசியந்தான்.

***

ஜகத்பிரசித்தரான ஜகதீச சந்திரபோஸ் (வசு) என்ற பௌதிக சாஸ்திரி தாம் கண்டுபிடித்த உண்மைகளைப்பற்றி ஹிந்தி பாஷையாகிய மாதிரு பாஷையில் வடஇந்தியாவில் பிரசங்கங்கள் செய்தார். லார்டு ஹார்டிங் பிரபுவும் ஸ்வபாஷையிற் கற்பித்தல் நயமென்று தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். சென்ற சில நாளைக்கு முன்னர் கல்கத்தா சர்வகலாசாலைக்கு வைஸ்-சான்ஸலரான டாக்டர் சர்வாதிகாரியார் தாய் பாஷையில்தான் ஆங்கிலபாஷையைத் தவிர மற்ற சரித்திரம், பூகோள சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம் முதலிய விஷயங்களைக் கற்பிக்கவேண்டியது நியாயமென்று கூறியுள்ளார். மேலும் வங்காளமானது இந்தியாவின் பற்பல பாகங்களுக்குள் முதன்மையாய் விளங்குவதற்கு காரணம் அம்மாகாணத்தில் மாதிரு பாஷாபிவிருத்தியை வங்காளிகள் நாடியதேயாம். நந்தமிழ் நாட்டிலும் அவ்வண்ணமே தமிழ் மாதாவின் பெருமையை எல்லோரும் பாலிப்போமாக.

***

இன்று (ஜுலை 10உயில்) காசியில் உள்ள தியசாபிகல் பெண்கள் பள்ளிக்கூடமானது காலேஜ் பதவியைப் பெறப்போகின்றது என்றுகேட்கச்சந்தோஷமடைகிறோம். இங்கிலாந்திலிருந்து எம். ஏ. விருதுபெற்ற மிஸ். ப்ரௌ

னிங் அம்மாள் தலைமைஉபாத்தியாயினியாய் வரப்போகிறார்களாம். வெகுகாலமாய் ஸ்திரீ வித்யா விஷயமாயுழைத்து வந்த மிஸ் அருண்டேல் அம்மாளும் உதவியாய் வந்திருக்கிறார்கள். மதராஸிலிருந்து வந்திருக்கும் ஸ்ரீமதி சீதாபாயும், புகழ்பெற்ற சஞ்சீவிராயர் மனைவியாரான ஸ்ரீமதி பத்மாபாயும், ஸ்திரீகள் வசிக்கும் ஆசிரமத்தை மேற்பார்த்து வருகிறார்கள். மாதாஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாள் அவர்களின் ஆசீர்வாதத்துடனும் அன்பார்ந்த பரிபூர்ண சகாயத்துடனும் இம்மஹா க்ஷேத்திரத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தகாலேஜானது ஹிந்து யூனிவர்சிடியின் ஆளுகைக்குள் சேர்க்கப்படப்போகின்றது என்று கேட்க இன்னும் அதிகமாய்க் களிக்கிறோம்.

***

நமது ஞானசகோதரர் வி. ஜினராஜதாசரவர்கள் இங்கிலாந்துக்குப் போயிருக்கிறார்கள். அங்கிருந்து நமது மாதிரு பூமியின் விஷயமாய் உழைத்து வருகிறார்கள் அவர்கள் எங்கு சென்றாலும் இனிய சொற்களாலும், ஆழ்ந்த எண்ணங்களாலும், பூர்ண அன்பினாலும், அரும்பிய புன்சிரிப்பினாலும் எல்லோருடைய மனதையும் கவரும்தன்மையர். ஆகையால் பிரஹ்மஞான சபையின் வேலையும் இந்தியாவுக்காக எடுத்துக்கொண்ட வேலையும் தாழ்வற நடக்கும் என்பதில் ஐயமில்லை. இங்கிலாந்திலிருந்து நமது சகோதரர் ஜி. எஸ். அருண்டேல் அவர்கள் இங்கு வந்துவிட்டார்கள். வந்ததுமுதல் அதிக சுறுசுறுப்பாய் இந்தியாவின்மேம்பாட்டுக்காகஉழைக்கத்தொடங்கிவிட்டார்கள். நெல்லூரில் நடந்த மாணாக்கர்கள் குழாத்துக்கு மாதாஸ்ரீ பெஸண்டம்மாளுடன் சென்று அங்கு பேசினார்கள். மதராஸ் யூனிவர்சிடியில் வருஷாவருஷம் பரீக்ஷையென்று பெயர்வைத்துபரீக்ஷைக்குப்போன பெரும்பாலரை தேறவில்லையென்று தீர்மானிக்கும் பெருவிளையாட்டின் அநீதியைப் பற்றிபத்திரிகைகளில் எழுதினார். இந்தியா பிரிட்டிஷ் ராஜாங்கத்தின்கீழ் ஸ்வாராஜ்யம் அடைவதற்காக ஹோம் ரூல் லீக் என்ற சபைக்கு காரியதரிசியாய்அமர்ந்திருக்கிறார்கள் இத்தகையோருக்கு உழைப்புத்தான் ஓய்வாயிருக்கிறது.

ஆர். ரங்கசாமி ஐயர்

## மீராபாய்.

(72-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

கும்—என்னுடைய பட்ட மஹிஷியாகிய இவளைப் பிரஜைகளில் ஒருத்தியாக நானெப்படி எண்ணமுடியும்? பிரஜைகளின் குற்றங்களை மறப்பதுபோல் இவள் குற்றத்தை நான் மறக்கமுடியுமா? சுந்தரி, இனி நீ அவள் பக்ஷம் பேசினால் எனக்கதிக கோபமுண்டாகும். இனி அவள் இப்புவியில் உயிருடனிருந்தால் நான் சோகாக்கிராந்தனாகிக் கட்டாயம் மரிப்பேன். உனக்கு நானுயிருடனிருக்கவேண்டுமா, அல்லது, அந்த பாபி உயிருடனிருக்கவேண்டுமோ?

சுந்—இப்படித் தாங்கள் கேட்டால் நானென்ன பதிற் சொல்வது? நானும் மீராவுமெவ்வளவு சிநேகத்துட னிருந்தாலென்ன? எனக்குத் தங்களைவிட யாராவது அதிகமாவார்களா?

கும்—சுந்தரீ, அப்படி நீ யெண்ணங்கொண்டிருப்பது உண்மையானால், இனி யென்னிடத்திலந்தப் பாபிக்குப் பரிவாக ஒருவார்த்தைகூட பேசலாகாது. நான் அவளுயிர் துறக்கவேண்டு மென்று தீர்மானித்துவிட்டேன். அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நாம் செய்ய யத்தனிக்கவேண்டும்.

சுந்—தங்களிஷ்ட மெப்படியோ அப்படிச் செய்யுங்கள். இவ்விஷயத்தில் என்னைமட்டும் தாங்கள் உபயோகப் படுத்திக்கொள்ளக்கூடாது.

கும்—சுந்தரி, என்ன சொன்னாய்? என்னுடைய அபிப்ராயத்துக் கிணங்குவதோடு கூட நான் செய்யும்படியான காரியங்களில் எனக்குதவிபண்ணவேண்டியது உன்னுடைய கடமையல்லவா? அதை நீ மறந்தனையோ?

சுந்—இல்லை, நாதா, பழகின தோஷத்தால் மீரா விஷயத்தில் என் புத்தி தடுமாறுகிறதே யல்லாமல் வேறொன்று மில்லை. தாங்கள் எது சொன்னாலும் அதை நான் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.

கும்—இந்த மீராவையெப்படியாவது இவ்வுலகத்தினின்றனுப்பிவிடவேண்டும். அதற்கு ஏதாவது வழிசொல்.

சுந்—தங்களுக்குத் தெரியாத வழியையா நான் சொல்லப் போகிறேன்?

கும்—(யோசித்து) சுந்தரீ, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஆனால் உனது அபிப்ராயம் அதைப் பற்றி எப்படி யிருக்குமோ?

சுந்—என்ன யோசனை?

கும்—நம்பிக்கை வைக்கக் கூடிய கொலையாளிகளைக் கொண்டு நமது காரியத்தை முடிக்கக் கூடாதா?

சுந்—(தனக்குள்) இப்படியும் புத்தி யிழக்கவேண்டுமா? (வெளியாக) இதுவொரு நல்ல யோசனை தான்.—ஆனால் பாதகமில்லை.

கும்—அரை மனதோடு சரியென்றாயே. உன் மனதில் இருப்பதை ஒளிக்காமற் சொல்.

சுந்—நாம் நம்பக்கூடிய கொலையாளிகள் கிடைக்கும் பக்ஷத்தில் ஒரு பாதகமுமில்லை. அப்படிப்பட்டவர்கள் அகப்படுவது தான் கஷ்டமென்று தோன்றுகிறது.

கும்—இதிலென்ன கஷ்டம்?

சுந்—(தனக்குள்) மீராவைக் கொல்ல எவரும் துணியார்களென்பது நிச்சயம். இக்காரணத்தை யிவரிடம் சொல்லக் கூடுமா? (வெளிப்படையாக) இப்படிப்பட்ட விஷயங்களி

எல்லா மெவ்வளவுக்கெவ்வளவு இரகசியமாய்க் காரியத்தை முடிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நலம். தாங்கள் நியமிக்கப்போகிற கொலையாளிகள் இக்காரியத்தை இரகசியமா யொருவருக்கும் வெளியிடாமற் செய்வார்களென்று நாம் நம்பக்கூடுமா? அவர்கள் வெளியிட்டால் என்ன வருமென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயமே. ஆகையால் நம்மிருவரைத் தவிர வேறே ஒருவருக்கும் இச்சமாசாரம் தெரியாமலிருப்பதே நலம். பிறகு தங்களிஷ்டம்.

கும்—நீ யதைப்பற்றி யொன்றும் பயப்படவேண்டாம், சுந்தரீ. தங்களுயிரை யிழந்தாலும் ரஹசியத்தைக் காப்பாற்றி என் கட்டளையை நிறைவேற்றக்கூடிய இரண்டு கிங்கரர்கள் என் வசத்தில் இருக்கிறார்கள். அவர்களையழைத்துத் தகுந்தபடி கட்டளை யிடுகிறேன். நீ யுன்னுடைய அறையிற் போயிரு; நான் சீக்கிரத்தில் அங்கே வருகிறேன். (சுந்தரி யொருபுறமாகவும், கும்பாஜி மற்றொரு புறமாகவும் போகிறார்கள். சற்று பொறுத்து 'ஏகநேத்திர'னும், 'அதிமூட'னும் வருகிறார்கள்.)

அதி—நம்மே இங்கிட்டு மவராசா என்னாத்துக்கடா வரச் சொன்னாஹ?

ஏக—என்னடா, இம்புட்டு அவசரம். கொஞ்சம் பொறுத்தாக்கே எல்லாம் தெரிஞ்சிடாது. அடே, ராசா வரப்போராங்கடா, வாயை மூடிக்கொண்டிருடா.

(கும்பாஜி வருகிறார்).

கும்—அடே, உங்களிருவருக்கு மிப்போதொரு கட்டளை யிடப்போகிறேன். அதிக ஜாக்கிரதையுடன் ரொம்ப ரஹசியமாயதை முடிக்கவேண்டும். நான் சொல்லுகிறதைச் சரிவர நடத்துவீர்க ளென்கிற பூர்ண நம்பிக்கையுடனேதான் உங்களிருவரையும் நானிங்கு வரவழைத்தேன். என்னுடைய நம்பிக்கையை நீங்கள் வகிக்கத்தக்கவர்களா

ண்பதை இந்த விஷயத்திற் காட்டவேண்டும். அப்படிச் செய்யும் பக்ஷத்தில் நிரம்ப திரவியத்தை யடைவீர்கள். செய்யாமற் போனால்........ஜாக்கிரதை. சரிதானா?

ஏக—ஆண்டவனே, காத்திட்டிருக்கேன்.

கும்—அடே, அதிமூடா, உனக்கும் சம்மதந்தானே யடா?

அதி—அப்படிக்கே, மவராசா.

கும்—இப்போது நீங்கள் செய்யவேண்டிய காரியம் யாதெனில், அதிசீக்கிரத்தில்—ஏன் இன்றிரவே—எனக்குச் சத்ருவாயிருக்கும் ஒரு ஸ்திரீயின் உயிரை மாய்க்கவேண்டும். (இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுகிறார்கள்) என்னடா, விழிக்கின்றீர்கள்?

அதி—ஒன்றுமில்லே ஆண்டவனே, ஒரு—ஒரு—ஒரு பொம்பளேயா—

கும்—சீ நான் சொல்வதைச் செய்கிறீர்களா அல்லது உயிரை—

ஏக—(அதிமூடனுக்கு) சும்மாரு தம்பி. (கும்பாஜியை நோக்கி) மவராசா, இந்தப் பயலேப்பத்தி ஒரு பயம் வேண்டாம். நான்ரு இருக்கேன். எல்லாத்தையும் சரிப் படித்திக்ரேன். உத்திரவு?

கும்—கிட்ட நெருங்கி வாருங்கள். மீராபாயிருக்குமிட முங்களுக்குத் தெரியுமல்லவா?

ஏக—ராணியம்மாத்தானே?

கும்—(அதிகவெறுப்போடு) ஆமடா. நீங்களிருவருமொருவருக்கும் தெரியாமல் அவளேக்கொன்று நிர்மானுஷ்யமான ஒரு இடத்திற்குக் கொண்டுபோய் அவளேப் புதை

ந்துவிட்டு இன்றிரவேளன்னிடத்திலேதாவதொரு அறிகுறி யைக் கொண்டுவந்து காண்பிக்கவேண்டும் (இருவரும் நடுங்கு கிறார்கள்.)

போய்ச் சீக்கிரமிதை முடிக்க ஏற்பாடு செய்யுங்கள்

அதி—(நடுங்கிக்கொண்டே) ராணி அம்மாவையா—

கும்—என்னடா, அவன் கண்மாதிரி உன் காது கொஞ் சம் மந்தமா? அவளைத்தானடா. போங்கள். நீங்களிரு வரும் உயிருடனிருக்க வேண்டுமானல் நான் சொன்னதைச் சரியாய்ச் செய்து முடியுங்கள்—ஜாக்கிரதை. (போகிறான்.)

ஏக—ஒனக்கு ஊட்டிலே நன்றாய்ப் பேர்வச்சாங்கடா. ஒனக்கேதாச்சும் சொல்லணுமானுக்கே அந்த ராசா எதிருக் கேயே சொல்லித்துலைக்கணுமா? வெளியேவந்து என் கா தோடே சொல்லப்படாதா? நல்ல புத்திடா, ஒனக்கு. ஒல க்கேக் கொழுந்தும் குந்தாணிவேரும். அடே இன்னிக்கி ஒன்னைப் பிடிச்ச நல்லகாலம் தான் பொளச்சே. இல்லா ட்டி அந்தப் பொல்லாத ராசாடா அவன் அப்பவே ஒன் கண்ணைப் பிடுங்கிட்டிருப்பாண்டா. ஏதோ, நம்ம ராணியம் மாசாமிதான்-அந்தக்கிட்டணசாமிதான். ஒன்னை இன்னி க்கி காப்பாத்திச்சு.

அதி—ஆமாண்ணே, எல்லாம் நீ சொன்னுத்தான் என க்கு சரியாயிருக்கு. இல்லாட்டி கொஞ்சம் ஒரு மாதிரி தான், சத்தியமா சொல்றேன். அந்தம்மா சாமிதான் என் னைக் காப்பாத்திச்சு. இசால்ரேன் கேளு, இல்லாட்டி அந்த நல்ல அம்மையை—அவா என்னடா செய்தாங்கோ; பாபண்டா— அந்த ஒண்ணும் தெரியாத அம்மையைக்கொ ன்னூடதுணிஞ்சிட்ட அந்த பொல்லாத ராசாவா என்னை விட்ருப்பான். என்னவோ—அதிருக்கட்டும் அண்ணே; இந்த சங்கடத்துலே வந்து ஆப்பிட்டுக்கொண்டமே, அந்த ராணி அம்மாவையாவது கொல்லவாவதுடா,

ஏக—அடேபோடா, புத்திகெட்ட பயலே, ஒனக்கொண்ணும் தெரியாது. நான் சொல்ரத்தைக் கேளு, வாயை மூடிக்கிட்டு இரு. தெறந்திடாதே. எத்தையாவது ஒளறிக்கிட்டு பேத்தாதே.

அதி—அது சரிதாண்ணே, இதை என்னமா நீ ராசா கிட்டக்கே ஒப்புத்துக்கிட்டே. என்ன நெஞ்சுக்கனம் ஒனக்கு. அடே ஒனக்கு மனசு கேட்டுதாடா?

ஏக—என்னடாது. இப்படிக் கேக்கறே. அந்த ராசா சொன்ன எப்படிரா மாட்டேங்கறது?

அதி—இதெப்படி செய்யரது அண்ணே?

ஏக—எப்படியாவது செய்யாதாவதுரா? செய்துதானே தொலைக்கணம், நமக்கு வேறே வழியேதுடா. இதை செய்யாட்டி தெரியுமோல்லியோ? ஊ? அவ்வளவு தான்— நாளே பொளுது விடியரத்துக்குள்ளே நீயும் நானும் யம லோகம் தான். சும்மா பயந்தாக்கே என்னடா ஆவும்?

அதி—அண்ணே, நான் சொல்ரத்தைக்கேளு. நீயும் நானும் எவ்ளவோ கொலை செய்திருக்கிறோமே, ஒருபோதும் என் மனசு இந்த மாதிரி சங்கடப்பட்டதே கிடையாதுரா. என்னமோ பயமாயிருக்குடா. நீதான் சொல்லேலன். எப்பவாவது நான் இத்தனே பயந்ததுண்டாடா. ஒனக்கெப்படியிருக்கோ, எனக்கென்னவோ மனசு கேக்கலே யண்ணே.

ஏக—அடேபோடா, ஒன்னைக் கட்டிக்கிட்டு நானளரேனே, அதைச் சொல்லு. எப்ப பாத்தாலும் இப்படித்தான். ஒன் பேச்சைக் கேட்டா அவ்வளவுதான், தொலஞ்சான். ஊட்டுக்கு போவோம் வாடா. எல்லாம் அங்கிட்டுப் பாத்துக்குவம். (போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது)

(இன்னும் வரும்)

ஆர். ஸ்ரீநிவாச ஐயர் M. A.

# பிரஹ்மஞ்ஞான சபையின் அரைகள்.*

இந்தியாவிலுள்ள பிரஹ்மஞ்ஞான சபை அங்கத்தினரிற் பெரும்பாலர், சபையை ஸ்தாபித்து அதை நடாத்திவருகின்றவர்களும், உலக வியவகாரங்களை மேற்பார்த்துவருகின்றவர்களுமான மகரிஷிகளிருப்பதை நம்புகின்றார்கள். ஊக்கத்துடன் நமது சங்கத்திற் குழைப்பவர்கள் பலரும் அப்பெரியோர்பால் மிகப் பக்தியுள்ளவர்கள். க்ள காரியத்தையும் அப்பெரியோர்க்கென்று அர்ப்பணஞ்செய்து அதைத் துவக்குவதே காரியாநுகூலமாவதற்கு உற்ற வழியென நம்புகின்றவர்கள். இஃது அத்தகைய அங்கத்தினர்க்கு அநுபவசித்தமான விஷயமாகையால், அவர்கள் பலவான்மாக்களை பெரியோர் திருப்பாதங்களிற் சேர்ப்பிக்கவேண்டுமென்ற அவா மிகக்கொண்டவர்களாயிருக்கின்றார்கள். அம்மஹரிஷிகள் திருவருளைப்பெற ஏற்ற கால்வாய்களாய் அமையவேண்டுமென்பதினும், வேறெந்த விருப்பமும் அவர்கட்கில்லையென்றே கூறலாம்.

எங்கெங்கு அத்தகைய உயர்ந்த ஊக்கமுள்ள அங்கத்தினர்கள்கூடி முறையாய்ச் சபையை நடாத்துகின்றார்களோ அங்குங்கூட பெருங்காரியங்கள்நடந்தேறுவனவில்லை. அதன் காரணங்களிலொன்றை நான் இங்கு எடுத்துக்கூறுகின்றேன். எத்தனையோ பிரஹ்மஞ்ஞான சபையின் கிளைச் சங்கங்கள், தங்கள் ஊரிலுள்ளவர்கள் தாங்கள் செய்யுங் காரியங்களில் சிறிதளவேனும் அக்கரை யெடுத்துக்கொள்வதில்லை யெனவும், முன்னொருகாலத்தில் தங்கள் சபைகள் செவ்வனே நடைபெற்று வந்தன வெனவும், ஆனால் இப்பொழுது அவ்விதமில்லையெனவும், முறையிடக் கேட்டிருக்கின்றோம். சபையின் அங்கத்தினர்களாலும், அபிமானிகளாலும் பல ஆண்டுகட்கு முன்னர் மிகுந்த பொருட் செலவுசெய்து சபைக்குச் சொந்தக் கட்ட

* ஸ்ரீ ஜீனராஜதாசர் அவர்கள் வியாசத்தின் மொழிபெயர்ப்பு

டம் ஏற்பட்டிருக்கும் இடங்களிலுங்கூட நல்வேலை நடந்தேறுவதில்லை.

இத்தேசத்தில் நான் உழைத்து வந்திருக்கும் இரண்டரை வருடங்களுக்குள் நமது சபையின் பற்பல கட்டடங்களையும், கிருகங்களையும் பார்த்திருக்கின்றேனாதால், அவை ஏன் முன்னேற்றம் அடையாமல், க்ஷீணித்துவருகின்றன என நான் நன்கறிவேன். நமது அறிவின்மையாலோ, அலக்ஷியத்தாலோ, பெரியோர்கள் சக்தி அங்கு பிரவேசியாதபடி நாம் தடைசெய்கின்றோம். ஆதலாற்றான் இவ்வண்ணம் சபைகள் சீர்கெட்டுக்கிடக்க நேருகின்றது. அவ்விதமான விக்கினங்களுக்கு காரணமொன்று அழுக்கும், அசுத்தமும், பிரஹ்மஞ்ஞான ஆலயத்தில் நாம் வைத்திருப்பதே. சில விடங்களிற் சபைக் கட்டில்களிலும், நாற்காலிகளிலும் தூசி மிகப்படிந்து அவற்றின் மேல் நாம் விரல்கொண்டெழுதக்கூடிய வண்ணம் புழுதி மேடாய்க் குவிந்திருப்பதை நான் பார்த்துள்ளேன். கைக்குட்டையொன்று அங்கு தவறி விழுந்தாலோ, அதைக் குப்பையில் கொண்டெறிவதைவிட வேறொன்றுஞ் செய்யமுடியாது. அங்குள்ள ஒழுங்கீனத்தைப்பற்றி நான் கூறவும் வேண்டுமா? அறைமுழுதும் பழையபெட்டகங்களும், பத்திரிகைகளும் புத்தகங்களும், அலமாரிமேல் புழுதியும், கந்தைகளும்,— கூடாத வஸ்துக்கள் யாவும்—அங்கு அபரிமிதமாய்க் காணலாம்.

இவையெல்லாம், சுத்தம், ஒழுங்கு, அழகு முதலியவற்றை சற்றுக் கவனிக்கக்கூடிய சாமானிய மனிதர்கட்கே அடக்கா வெறுப்பைத் தருவனவாயிருப்பின், அதிதூய்மையும், அழகும், நுண்ணிய வுணர்ச்சியும் பொருந்தியமகரிஷிகளின் சரீரங்களை அவை தாக்கி, எவ்வாறு அவர்களைத் துன்புறுத்தாமலிருக்கும்? எவ்வித இடையூறுகளையும் அவர்கள் மேற்கொள்ளலாமென்பது சரியே. ஆயினும், அவர்கள்

தங்கள் சக்தியிற் சிறிதேனும் வீண்செலவு செய்யார்களென்பதை நாம் மறக்கப்படாது. ஸ்தூலலோகத்தில் தங்கள் சபைமீது பெரியோர்களது அருட்பிரகாசம் வாராவண்ணம் அங்கத்தினர்கள் அறிவின்மையால் தடைகளைசெய்துகொள்வாராயின், சூக்ஷ்ம சரீரம் வழியாய் ரிஷிகளுடைய ஆசிர்வாதம் அவர்கட்குக் கிடைத்தபோதிலும், ஸ்தூல லோகத்தில் அச்சாந்நித்தியம் கிடைக்கமாட்டாதுதான். இது சபையின் அங்கத்தினர்களுடைய குறையேதவிர வேறில்லை இவ்விதம் நமது உபேக்ஷையாலோ அஞ்ஞானத்தாலோ ஸ்தூலலோகத்தில் மாத்திரம் மகரிஷிகளுடைய உதவியையும் ஆசிர்வாதத்தையும் வேண்டாமெனத் தள்ளிவிடுகின்றவர்கள் ஆகிறோம்.

அசுத்தக் களஞ்சியமான அவ்விதக் கட்டடத்தில் ஒரு பெரியோர் பிரவேசஞ்செய்வாராயின், இவ்வித அசௌகர்யங்களை யவர் உணரமாட்டாரென நாம் நினைப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. அல்லது, அப்பெரியோர்கள் தாம் நமது சபைக்கு வரமாட்டார்களே; ஆகலால், நமது அறை எவ்விதமிருந்தாலென்ன? என்று நீங்கள் யோசிக்கின்றீர்களா? இப்படி எண்ணுதல் இழுக்கு. ஆகையால், அவ்வாறில்லாமல் தெருவிலிருந்து மஹரிஷியொருவர் திடீரென நமதரங்கிற்கேகினல், தமது உயர்ந்த உலகின் ஒரு சிறு கூறுகிலும் இங்கிருக்கின்றதேயென அவர் சற்று ஆறுதலடையும் வண்ணம் அத்துணை சீராயும், சிறப்பாயும் சுத்தமாயும் நமது சபையின் அறைகளை வைத்திருத்தல் வேண்டும்.

இவ்வாறு நமது அறைகளைக் கவனித்து வருவோமாயின், பிரஹ்மஞ்ஞான வொளி வெளியுலகிற் பாவுகின்றதில்லையே யெனவும், ஜனங்கள் சபை விஷயத்தில் முன்போல் ஊக்கங்காட்டவில்லையே யெனவும் நாம் முறையிட முகாந்தரமிராது. உற்ற கலங்களை மாத்திரம் நாம் அமைப்

போமாயின், ஈசன் உயிரான அருள் வெள்ளம் ஆங்கு பிரவகிக்கும். நமது கிருகத்துத் தரைகள், நாற்காலி, மேஜைத் துணி, புஸ்தக அறைகள், இவற்றிலுள்ள அழுக்கையும் ஆபாசத்தையும் உடனே அகற்றி, அங்குள்ளயாவையும் நிர்மலமாயும் நேர்த்தியாயும் வைப்போம். அறையிலுள்ள அவசியமான வஸ்துக்கள் எல்லாவற்றையும் வரிசையாகவும் அலங்காரமாகவும் வைப்போம். பிரஹ்மக்ஞான சபையின் கிருகம் ஒவ்வொன்றும் உத்தம தெய்வாலயம் போல் மனோக்ஞமாயிருக்கட்டும். இவ்வண்ணம் மாத்திரம் நாம் செய்து வருவோமாயின் பெரியோர் வேலையை முன்னிட்டு ஒரு மனிதனே அங்கிருந்து உழைக்குங் காலத்தும், சூக்ஷ்ம லோகத்தில் மாத்திரமன்றி ஸ்தூலலோகத்திலும் பெரியோர் அவனிடம் பழகி சன்முகமளிப்பார்களென்பது திண்ணம்.

ஆர். பஞ்சாபகேச ஐயர்.

---

## நன்மொழி.

---

எளிஅனல் தீப மிடமலர் கொய்தல்
அளிதின் மெழுகலது தூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல்பன் மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான் தாஸமார்க்கமே.

---

அறுவிது ஆதிப் பரமென் றகல்வர்
இதுவழி யென்று அங்கு இறைஞ்சினரில்லை
விதிவழி யேசென்று வேந்தனை நாடும்
அறுவிது நெஞ்சில் தணிக்கின்ற வாறே.

—திருமந்திரம் 1502, 1503.

---

## கீதா வாக்கியங்கள்.

---

பகவத் கீதையெனும் சிறந்த நூல் உலகப்ரசித்தமான தென்பதும், அஃது பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, பல ஜாதியார் அதைப் படித்து அதன் கருத்துக்களை யறிந்து அநுபவித்து ஆனந்திக்கின்றனர் என்பதும் யாவரும் அறிந்த விஷயம். ஜாதி மத பேதமின்றி யாவராலும் சமமாய் அங்கீகரிக்கப்படத்தக்க சிறந்த கருத்துக்கள் அதில் என்ன அமைந்திருக்கின்றன?

எக்காலத்திலும், எத்தேசத்திலும் யாவராலும், அங்கீகரிக்கப்படும் உண்மைகளே, லோகோக்திகள் எனப்படும். அவ்வ காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு மாற மாட்டா. இவைதான், ப்ராக்ருதி விதிகள் என்றும் மஹா விதிகள் என்றும் சொல்லப்படுகின்றன. இவைகளில் பல பகவத்கீதையில் அடங்கியிருக்கின்றன.

குருக்ஷேத்ர ப்ரதேசத்தில் யுத்த ஸந்நத்தராய் பாண்டவ கௌரவர்கள் அணிவகுத்து நிற்கையில், பாண்டவர் படைமுன் ரதாரூடனாய் அர்ஜுனன் இருக்கும்பொழுது தன் இனத்தாருடன்போர்புரிய நேர்ந்தகொடுமையையினைத்துக் காண்டீவமென்னும் தனது வில்லைவழுவவிட்டு, துக்காக்ராந்தனாய் நிற்கும், அர்ஜுனனுக்கு, அவன்தேர்ப்பாகனான கிருஷ்ணபகவான் 'பகவத்கீதையெனும் இச்சிறந்த நூலை உபதேசித்தார் என்று மஹாபாரதம் பீஷ்மபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மைதானா? அது ஸமயோசிதமாய் நேர்ந்திருக்கத்தக்கதா? அது பிற்பட்டு வரையப்பட்டு, மஹாபாரதத்தில் சேர்க்கப்பட்ட ப்ரக்ஷிப்தமாய் ஏன் இருக்கக்கூடாது? என்று பல ஸந்தேகங்கள் பாஷாவித்வான்களால் கூறப்படுகின்றன. அவை எவ்வாறிருப்பினும், அதிலடங்கிய விஷயங்களை நாம் அறிந்து

ஆனந்திப்போம் என்று கூறுவாருமுளர். கனி நிறைந்த மரத்தடியில் தாகவிடாயுடன் சென்ற இருவரில் ஒருவன் மரத்தில் எத்தனை கனிகள் இருக்கின்றனவென்று எண்ணிக்கொண்டிருக்க மற்றவன் அக்கனிகளைப்பறித்துத் தின்றுகொண்டிருந்த கதைபோல் முறையே மேற்கூறிய இருதிறத்தினருடைய செய்கைகளுமிருக்கின்றன.

இப்பெரிய விசாரணையில் தலையிடாது, இவ்வரிய பெரிய நூலிலுள்ள சிறந்த விஷயங்களை ஒருவாறு அறிய முயலுவோம்.

## 1 சிரேஷ்டன்.

யத்யதாசரதி ஶ்ரேஷ்ட: தத்ததேவேதரோ ஜந: ।
ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே ॥

"மேலானவன் எதெதை அனுஷ்டிக்கின்றானோ அதையதைத்தான் மற்ற ஜனங்களும் அனுஷ்டிக்கின்றார்கள். அவன் எதைப் பிரமாணமாய ஸ்தாபிக்கின்றானோ, அதைத்தான் மற்றவர்களும் அநுஸரிக்கின்றார்கள்."

இதில் சிரேஷ்டன் என்பவன், எக்காரணத்தாலாவது அந்தந்த ஜனசமூகத்துக்குத் தலைவன் அல்லது பெரியவன், அல்லது செல்வாக்குடையவனாயிருக்கவேண்டும். அவ்விதத் தலைமை, படிப்பு, பணம், பலம், ஜனக்கட்டு முதலான எக்காரணத்தாலும் ஏற்படலாம். உதாரணமாக கல்வியே ப்ரதானமாய்க் கொண்ட ஜன சமூகத்துக்கு வித்வான் சிரேஷ்டனாகின்றான். செல்வத்தைத் தேடும், வியாபாரிகள் முதலானவர்களுக்குத் தனிகனே தலைவனாகின்றான். பலமே ப்ரதானமாய்க்கொண்ட யுத்த வீரர்களுக்குப் பலவான் சிரேஷ்டன் ஆகின்றான். ஆதலால் ஒவ்வொரு சமூகத்திலும், அததன் புருஷார்த்தத்தில் சிறந்தவனே தன் அதிகாரத்தைச் செலுத்தக்கூடிய சிரேஷ்டனாகின்றான். அப்படி சிரேஷ்டனானவன் சொல்லுவதையே மற்றவர்களும் அநுஷ்டிக்கின்றார்கள்.

இக்கருத்தமைந்துள்ள,

“வல்லான் வகுத்ததே வாய்க்காலெனும் பெரு
வழக்குக் கிழக்கு முண்டோ”

என்னும் தாயுமானவரின் பாட்டும் கவனிக்கத்தக்கது.

இதனால் நாம் முக்கியமாய்க் கவனிக்கத் தக்கதாவது. தலைவனாயுள்ளவன் நல்ல வழியை யனுசரித்தால் மற்றவர்களும் அவ்வாறே நடப்பார்கள். அப்படிக்கல்லாது, அவன் துர்ச்செய்கை செய்யநேரிடின், மற்றவர்களும் அதையனுசரிக்க நாளடைவில் அந்த சமூகமே அழிந்துவிடும்.

(1) யதா ராஜா ததா ப்ரஜா:
“அரசனைப்போல் குடிகள்.”

(2) தாயைப்போல் பிள்ளை.
நூலைப்போற் சேலை.

என்னும் பழமொழிகளும் கவனிக்கத்தக்கவை.

இப்பிரகரணத்தில் சொல்லப்பட்ட கீதாவாக்கியமானது, குருக்ஷேத்ர யுத்தபூமியில் அர்ஜுனன் யுத்தஞ்செய்ய மாட்டேனென்று வில்லை எறிந்த காலத்தில், ஸ்ரீகிருஷ்ண பகவானால், கூறப்பட்டது. “லோக ஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந் கர்துமர்ஹஸி” (iii—20), “லோக நன்மையை உத்தேசித்தாவது உன் கடமையைச் செய்” என்றார். அதாவது “நீயுத்தம் செய்யாது விடுவாயாகில், உன்னை ஒரு உதாரணமாய்க் கொண்டு மற்றவர்களும் தம் தம் கடமைகளையும் விட்டுவிடுவார்கள்.” அடுத்த (iii–21) சுலோகத்தில் “எனக்கு இம்மூவுலகிலும் ஆகவேண்டியதொன்றுமில்லை. அப்படியிருக்க நானே என் கர்மங்களைச் செய்கிறேனல்லவா” என்றார்.

## 2 மத வேற்றுமையின்மை

யேऽப்யந்யதேவதா பக்தா யஜந்தே ஶ்ரத்தயாந்விதா:।
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம் ॥

மற்ற தேவதைகளை யாராதிப்பவராயினும் சிரத்தை யுடன் ஆராதிப்பாராகில், விதிப்படி ஆராதிக்காதபோதி லும் என்னையே ஆராதிக்கிறவர்களாகிறார்கள்.

இந்த கீதா வாக்கியத்தால் ஈசன் ஒருவனேயென்றும் அவரை எவ்வாறு ஆராதித்தாலும், எப்பெயர் கொண்டு ஆராதித்தாலும், உண்மையில் அவரையே ஆராதித்தவர்க ளாகிறோம் என்றும் தெள்ளென விளங்குகின்றது. இப் பொருள்கொண்டே

ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி ॥

"இருப்பது ஒன்றே அறிஞர் பலவாறாய்க் கூறுகின்ற னர்" என்று உபநிஷத்தும் முறையிடுகின்றது. தாயுமான வரும்,

"வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளக்கும் பரம்பொருளே நின் விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியினதித்திரள் போல் வயங்கிற்றம்மா."

என்று கூறுகிறார்.

உண்மை யிப்படியிருக்க, அதை யறியாமல் உலகத் தோர் சாதாரணமாய் வழக்கமாக இவ்வுண்மைக்கு விரோத மாக நடந்துவருகிறது மனதைப் புண்படுத்துகிறது. கர் னல் இங்கர்சால் என்ற ஒரு புத்திமான் "உலகத்தில் நடந் திருக்கும் குற்றங்களையும் கொடிய செய்கைகளையும் கணக் கிடுவோமாகில், ஈசுவரன் பெயரைச் சொல்லியும், மதத்து வேஷத்தினாலும் செய்யப்பட்டுள்ள குற்றங்களே பெரும்பா ன்மை" யென்று கூறியிருப்பதும் உண்மைதான். மண்ணா சை, பெண்ணாசை, பொருளாசை யென்னும் ஈஷணாத்திரய ங்களே, உலகத்தில் நடக்கும் அக்கிரமங்களுக் கெல்லாம் காரணமென்பார். அம்மூன்றுக்கும் மேற்பட்டதா யிருக் கின்றது மதத்துவேஷம் என்பது. இவ்விஷயத்தை சிந்தையி

விட்டதும், 13, 14-ம் நூற்றாண்டுகளில் பலஸ்தீன் என்னும் கிரீஸ்தவ புண்ய பூமியை மகம்மதியரிட மிருந்து கைப்பற்ற ஐரோப்பா முழுவதும் திரண்டு செய்த க்ரூஸேட் என்ற தர்ம யுத்தங்களும், மேரி ராணி காலத்தில் ப்ராடஸ்டாண்டுமதத்தார் ஹிம்ஸிக்கப் பட்டதும், ப்ராடஸ்டாண்டு மதத்தினராகிய அரசர் காலத்தில் ரோமான் காதலிக் மதத்தார் ஹிம்ஸிக்கப்பட்டதும், மஹம்மதியர், மற்றவரை சத்திக் கிரையாக்கியதும், இந்துக்கள் கோவில்களை இடித்ததும், சிரமணர் கழுவேற்றப்பட்டதும், தற்காலத்தில் ப்ரத்தியக்ஷமாய் நாம் பார்க்கிற தென்கலை வடகலைச் சண்டைகளும், மதத்வேஷத்தால் ஏற்பட்டனவல்லவா? இவைகட்கெல்லாம் காரணமான அறியாமையை நீக்கி எல்லா மதங்களும் ஒன்றே, நாம் எந்த தெய்வத்தை வழிபட்டாலும் நம்முடைய வழிபாடெல்லாம் உண்மையான பரம்பொருளையே சாருகின்ற தென்ற உண்மையைப் பரவச் செய்வது எல்லோருடைய கடமையாகின்றது.

ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம் ।
ஸர்வதேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி ॥

“ஆகாசத்திலிருந்து விழுகிற தண்ணீரெல்லாம் கடைசியில் ஸமுத்திரத்தை யடைவதுபோல், ஸகல தேவதைகளையும், உத்தேசித்துச் செய்யும் நமஸ்காரங்களெல்லாம் கேசவனையே சேருகின்றன.

(இன்னும் வரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

# வைசாக பௌர்ணமி.

---

உலக சரித்திரத்தில், இது ஒரு மஹா புண்யதினம். மநுஷ்ய வர்க்கத்தின் ஆத்ம விகாஸத்தை நோக்குமிடத்து, இதைப் பார்க்கிலும் அரியதிருநாள் வேறொன்றில்லையென்றே சொல்லலாம். இற்றைக்கு இரண்டாயிரத்து ஐநூற்றைந்து வருஷங்கட்குமுன் இவ்வைசாக பௌர்ணமி தினத்தில்தான் கௌதமர் போதம் பெற்றார். அது முதல்தான் அவருக்கு புத்தர் என்ற பெயர் வந்தது. ஆயினும் பெரும்பான்மையான லௌகிகர்கட்கு இத்திருநாளின் விசேஷம் புலப்படவில்லை. எத்தனையோ ஜனங்கள் இவ்விஷயத்தை இந்துதேச சரித்ரத்தின் மூலமா யறிந்திருப்பினும், சரித்ரங்களின் உயர்ந்த பயனை யிழந்தவர்களா யிருக்கிறார்கள். இக்காலத்துச் சரித்ரநிபுணர்கள் உலகில் ஏற்பட்டிருக்கும் அரிய பரமார்த்த உண்மைகளை, அல்லது சம்பவங்களையெல்லாம் உள்நோக்கி யறியாமையால், உபயோகமற்ற கட்டுக்கதைகளென்று தள்ளிவிடுகிறார்கள் மதங்களின் பிறப்பிடமாகிய இவ்விந்தியாவில் ஹிந்துக்களாலும், பௌத்தர்களாலும் வைசாக பௌர்ணமி தினமானது பற்பல காரணங்களைக்கொண்டு, மிகவும் சிறப்புற்றதாக மதிக்கப்படுகின்றது. தேவர்கள் மநுஷ்யவர்க்கத்திற்கு போதித்து, அதை விகாஸ முறையில் நடத்துவதற்கான வழிகள் பலவற்றுள், சாமான்யர்க்கேற்ற புராணக்கதைகள் மூலமாய்ப் படிப்பித்தலும் ஒன்றும். இப்பௌர்ணமி தினத்தில், கௌதமர் புத்தரானதுமட்டுமல்லாமல், அவர் கபிலவாஸ்துவின் அரண்மனையில் ஸித்தார்த்தன் என்னும் பெயர்பூண்ட இளவரசனாகப் பிறந்ததும் அதே தினந்தான். பிறகு 45 வருஷங்களாக அஷ்டாங்கமார்க்கத்தை எல்லா விடங்களிலும் உபதேசித்துத் தம்முடைய எண்பதாவது வயதில் ஸ்தூல உடலைத் துறந்து நிர்வாணம் அடைந்ததும் அதேதினந்தான். அவர்

---

* 1916௵ மே௴ 17௳ நியூ இந்தியாவிலிருந்து எடுத்தெழுதப்பட்டது.

அன்றுமுதல் இன்றுவரை மேல் உலகங்களிலிருந்து நம்மை அநுக்ரஹித்தே வருகிறார். இவ்விதம் அப்பிரபுவின் பிறப்பும், ஞானோதயமும், தேஹ வியோகமும் இம்மூன்றும் வைகாசிப்பூர்ணத்துப் பௌர்ணமியன்றே அவருக்கு ஸம்பவித்தமையால், அவைகளின் ஞாபகார்த்தம் அவருடைய சிஷ்ய ஸங்கத்தில் இத்திருநாள் கொண்டாடப்படுகின்றது.

பௌத்தர்களின் ஸம்ப்ரதாயப்படி பிரதி வருஷமும் இத்தினத்தில் பகவான் புத்தர், ஞானத்தில் தமக்கு இளையவர்களான மநுஷ்ய ஸமூஹ முழுமைக்கும் தமது அருள் வெள்ளத்தை வருஷிக்கின்றனர். அதன் மூலமாய் இவ்வுலகம் மேம்பாடு அடைகின்றது. உலகில் ஆத்மவித்யையை அப்பியஸிப்பவர்களுக்கு, மநந்தளராமையும், சிரத்தையும், ஊக்கமும் அதிகரிக்கின்றன. அஃதெப்படியிருந்தாலுங் கூட, ஆர்யாவர்த்தத்திலே பிறந்து, வளர்ந்து, ஸன்மார்க்கத்தை உலகெங்கும் பாவச்செய்த இத் துறவியாசர் நூற்றுக்கணக்கான முமுக்ஷுக்களை ஸம்ஸார ஸாகரத்தினின்றும் விடுவித்துப் பேரின்பமெனும் கரையிற் கொண்டு சேர்த்தவரன்றோ! நமது இந்தியாவின், க்ஷேமத்திற்காக தாம் கடைசியாய் இக் கருமபூமியைவிட்டு நீங்கும்வரை, உழைத்து எத்தகைய மேம்பாடு பொருந்திய தேசமாகச் சீர்திருத்தினரென்று யோசியுங்கள்! இந்த மஹான் நமது மநுஷ்ய வர்க்கத்திற்கே முதன்முதல் போதம் பெற்ற பிரபு. இந்தியாவிற்கு இம்மை மறுமைச் சிறப்பு அனைத்தையும் கொடுத்து, புதிய நாகரிகத்தை நிலைநிறுத்தியவர். வைதிகச் சடங்குகளின் வெளி ஆசரணைகளும், நாநாவிதமான கொள்கைகளும், மிகுந்து தமது மதமே உயர்வானது என்ற செருக்கும், இவைகளின் கார்யமாகப் பிறர் நலம் கருதாமையும் பிறரிடம் த்வேஷமும் வளர்ந்து, நமது ஆர்யர் நாகரிகத்தைச் சிதைவுறச் செய்யத் தொடங்கிய காலத்தில்,புத்தாவதாரம் நிகழ்ந்தது. இதுதான் அவர் பூலோகத்தில் எடுத்த கடைசிப் பிறப்பு. அவருடைய ஞானதீபத்தால் அக்ஞான

இருளையும், குடில புத்தியையும் நீக்கினார். அவர் எத்தகைய தீரராயிருந்து இவ்வுலகத்தில் தர்மத்தை நிலை நிறுத்தினாரென்பது சரித்திர வாயிலாக வெளியாகின்றது. இது வெறும் கதையல்ல. ஸர் எட்வின் ஆர்னால்டு அவர்கள், பக்தி பரவசத்தோடு செய்யுள் நடையில் ஆங்கில பாஷையில் இயற்றியுள்ள "ஆசிய தீபம்" என்னும் உத்கிரந்தத்தில், பூர்ணம் பெற்ற இம்மஹானுடைய ஜீவ்ய சரித்திரத்தை அழகாயும் இனிமையாயும் பாடியிருக்கின்றனர். அவர் செல்வப்பிறவியும், ஆத்மப் பிரகாசமே உருவெடுத்த யசோதரையை மணந்த சிருங்காரமும், இன்ப மாளிகையில் அவருடைய வாஸமும், உலகின் துன்பத்தையெல்லாம் தம் துக்கமாகப் பாவித்துத் துயருற்றதும், தம் ஜன்மத்தின் முடிவான பயன் என்ன, பரமார்த்தமான பிரயோஜனம் என்ன என்பதை அறிந்து கொண்டதும், அரண்மனையினின்று வெளியேறியதும் அவர் ஸஞ்சாரங்களும், அவர் விசாரங்களும், கேள்விகளும், மிகுந்த ஞானத்தாலும் அடையக்கூடாத மனச் சாந்தத்தோடு விளங்கிய ஸுஜாதையை ஸந்தித்ததும், போதி விருக்ஷத்தை யடைந்ததும், உலக வாழ்க்கையையும், அதன் இன்ப துன்பங்களையும் பற்றி ஆராய்ந்து முடிவு கண்டுகொண்டதும், புத்தரானதும் காசிக்கருகே மிருகதாவம் என்னும் க்ஷேத்ரத்திற்குத் திரும்பியதும், அவர் சிஷ்யர்களுக்கு ஒருஸங்கத்தை ஸ்தாபித்ததும், தர்மத்தை நிலைபெறச் செய்ததும், நிர்வாணமடைந்ததும் அழியாத கீர்த்தியுள்ளனவாகவே ஆத்மவித்யாப்யாஸிகளுக்குத் தோன்றும்.

சண்டையும் போராட்டமுமே பெரிதாயுள்ள தற்காலத்தில், இவ்வுலகில் தாரித்ரியமும் கொலைத் தொழிலுமே பிரதானமாய் உள்ளமையால், சாந்தமும், ஸமாதானமும் ஆனந்தமும் பூரித்துள்ள வழிகளை முற்றிலும் மறந்திருக்கிறோம். விதையானது முளைத்துத் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுக்கும்வரை பலனை எதிர்பார்த்து ஒருவன் பூர்ண நம்பிக்கையுடன் ஆதுரப்படாமல்இருப்பதுபோலவே

ஆத்மவித்யா மார்க்கத்திலும் முடிவுப் பயனையடையும் வரை ஒருவன் திடமான மநச்சாந்தத்துடன், தன்னுள் வித்துப்போல அடங்கியிருக்கும் ஈசுவராம்சத்தை விகஸிக்கச் செய்வதற்கு நாநாவித வழிகளிலும் யத்தனிக்கக்கடவன். பகவான் புத்தர் இவ்வித சாந்தத்தைக் கொண்டுதான், உயர்நலம் அமைந்த பயனெய்தினர். புத்தருடைய வாக்கின் பிரகாரம் துக்கம், துக்கோத்பத்தி, துக்கநிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் இவைகளாகிய நான்கு தத்வங்களை நன்கறிந்தவனாய் ஸன்மார்க்கத்தில் செல்வோன் ஒவ்வொருவனும் கடைசியாகப் பேரின்பமயமான உத்யான வனத்தையடைந்து, ஆங்குள்ள அமிருத ரஸம் நிறைந்த ஊற்றுக்களிடத்து தாஹசாந்தி செய்துகொண்டு, ஆநந்தாமிருத புஷ்பங்கள் உதிர்ந்து கிடக்கும் ரஸ்தாக்களின் வழியாய்ச் செல்வான். அமிருதத்வ மென்னும் வாஸனையே அங்கு கமழ்ந்திருக்கும். கடைசியில் ஸ்திரமான சாந்தியும், கரைகடந்த ஞானமும், அளவிறந்த சக்தியும் அவனுக்கு ஸித்திக்கின்றன. அத்தகைய ஞானத்தின் பயனைச் சற்றும் சிரமம் கருதாத கருணையோடு உழைத்துப் பேரின்ப மழையையே உலகத்திற்குப் பொழிந்த வண்ணமாயிருப்பான். துன்பத்தால் நொந்து கிடக்கும் இவ்வுலகிற்கு அவருடைய அநுக்ரஹம் இத்தினத்தில் கிடைக்கட்டும், போராட்டமொழிந்து ஸமாதானம் நிலைபெறட்டும். எச்சாதியானாயினும், ஒவ்வொருவனும் இம்மஹா குருவை ஆராதிக்கட்டும். அவர் உபதேசத்தை மறவாதிருக்கட்டும்.

தானஞ்சீலமே பொறை தக்கதாய வீரிய
மூனமிற்றி யானமே யுணர்ச்சியோ பொயமும்
மானமில் லருளினை வைத்தலே வலிமையு
ஞானமீரைம் பாரமிதை நாலெவ் காவிவைகளும்—மணிமேகலை

B. S. ராமசுப்பையர்.

## பரோபகாரம்.

(80-ம் பக்கத் தொடர்ச்சி.)

எப்பொழுதும் நற்காரியங்களைச் செய்ய நம்மால் முடியாவிடினும், பரோபகாரஞ் செய்யவேண்டுமென ஆயத்தமாயிருக்கும் எண்ணமும் மனோவிர்த்தியும் பல நன்மைகளை விளைவிக்கும்.

உலகில் சகலரும் பார்க்கக்கூடிய அரிய பெரிய காரியங்களைச் சாதித்தாற்றான் பெரியோர்கள் நமது வேலையை ஒப்புவார்களென நாம் நினைப்பது தவறு. செயல் பெரிதோ, சிறிதோ, அது உலகில் மெச்சப்படுகின்றதோ அல்லவோ, அஃது பராக்கிரமம் வீரசூரம் பொருந்தியதோ அல்லவோ, நமது அற்ப முயற்சியையும் பெரியோர்கள் கவனித்து வருகின்றார்கள். நாம் எவ்வித மனத்துடன் தொழில் புரிகின்றோம் என்ற விஷயத்தையே அவர்கள் கவனிக்கின்றார்கள். பலர் பார்த்து மெச்சக்கூடிய காரியங்களைச் செய்ய எல்லோரும் ஆசைப் படுவார்கள். அதை முடிக்கப் பிரயத்தினமும் செய்வார்கள். அத்தகைய காரியங்கள் எப்பொழுதுமே நேர்வனவல்ல. ஆயினும், அதைவிட மிகக் கடினமான காரியம் யாதெனின், யாரும் கவனியாமலும் புகழாமலு மிருக்கின்ற உபயோகமான வேலையை அன்புடனும் சற்றும் சலிப்பின்றியும் பிரதிதினமும் பிரதிநிமிஷமும் செய்வதே. எனவே, சிறிய காரியங்களென நாம் எதையும் அலக்ஷியம் செய்யவொண்ணாது. "சிறு துரும்பும் பல் குத்த வுதவும்" என்ற பழமொழி இங்கு கவனிக்கத்தக்கது. உலகின் துயரத்தைச் சற்றாகிலும் அறிந்தவர்களே இத்தகைய கைங்கரியம் புரிய ஆயத்தமாயிருக்கிறார்கள். மற்றவர்களோ "நான் ஏன் மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும்?" என்றுதான் கேட்பார்கள்.

"மௌனவாக்கு" என்னும் நூலில் பின் வருமாறு ஓர் மகரிஷி உபதேசஞ் செய்கிறார்:—"துக்கங் கொண்டவனின் கண்ணீரை நீ துடைப்பாய். சூரிய வெப்பத்தால் அது உலராமலிருக்கட்டும். தபிக்கின்ற ஒவ்வொருவனுடைய துக்கக் கண்ணீரும் உன் ஹிருதயத்தில் விழட்டும். அங்கேயே தங்கட்டும். அக்கண்ணீருக்குக் காரணமாம் துக்கத்தை நீ நிவர்த்திக்கு முன் அதைத் துடையாதே. இரக்கமுடைய நெஞ்சத்தினனே! இக்கண்ணீர்ப்பெருக்கால் ஏற்படும் வாய்க்கால்கள்தான் நித்தியமான அன்பு என்ற வயல்களுக்குப் பாசான வாய்கள்." ஆனதால் எவ்வுயிரைக் கண்டபோதிலும் நாம் அன்புடனும் முகமலர்ச்சியுடனும் அவர்களை நாம் சந்திப்போம். பிறருடைய கவலைகளையும் துயரங்களையும் நாம் முழுதும் நிவர்த்தி செய்யமுடியாவிடினும் சற்றுவது அவர்களுடன் பகிர்ந்துகொள்ள முயல்வோம். எச்சீவனைப் பற்றி நாம் சிந்தித்தபோதிலும் "அவ்வுயிர் பரிபாகமடையட்டும். அன்பிலும் ஞானத்திலும் உபகார சக்தியிலும் விருத்தியடையட்டும்" என நாம் நினைத்து நமது மனச்சக்தியை அவர்கள்மேல் பொழிவோம். அவர்களும் அவ்வாறே அபிவிருத்தியடைவார்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் மனோசக்தி மிகப்பெரியது. உலகைச் சிருஷ்டி செய்த சக்தி அதுவே. ஆனல் அஃது ஈசனுடைய மனோசக்தி. நமது மனோசக்தியும் அவ்விதமே பெருங்காரியங்களை முடிக்கவல்லது. நம்முடைய மனோவல்லமையால் நாம் மற்றோர் வியாதியைத் தீர்க்கவும் அல்லது பெருந்தீங்கு செய்யவும் கூடும். அதனுல் ஸ்தூல அணுக்களையும் உடைத்து சூக்ஷ்ம லோகத்து அணுக்களாக்கி விடலாம். ஓர் ஜீவனை மரண அவஸ்தைக் குட்படுத்திவிடலாம். அல்லது இறப்பவர்களையும் சற்று உயிர்ப்பிக்கலாம். அத்தகைய சக்தியின் அதி உயர்ந்த அம்சமே அன்பு என்பது. எனவே, நாம் அன்பால் பெருங்காரியங்களைச் சாதிக்கமுடியும். இரவும் பகலும், எவ்விடத்தும் எக்காலத்தும் பரோபகாரத்தின் பொருட்டு

நம்மை அர்ப்பணம் செய்து கொள்ளுங்கால், அறிவு ஞானம் என்ற மடைகள் திறந்துவிடும். இது திண்ணமே.

இவ்விஷயங்களை ஒவ்வொரு வாலிபரும் கருத்தில் வைத்து அவ்விதமே அப்பியசிக்க முயல்வாரானல் சகலரும் நலம் பெறுவார்கள். இங்கிலாந்து தேசத்தில் ஸர்பேடன் பௌவல் (Sir Baden Powell) என்னும் ஓர் ராணுவ தளகர்த்தர் "Boy Scout Movement" (பாய் ஸ்கௌட் மூவ்மெண்ட்) என்ற ஓர் பெரும் சங்கத்தை யேற்படுத்தியிருக்கின்றனர். அதில் சேர்ந்திருப்பவர்கள் வாலிபர்களே. அதி நேர்த்தியாய் பரோபகாரமான வேலையிலும் தேசத்திற் குழைக்கும் வழிகளிலும் அவர் அவர்களைப் பழக்கி வைத்திருக்கின்றார் நமது சக்கிரவர்த்தியே அவ்வேலையைப் பார்த்து மெச்சி தாமே அச்சங்கத்தின் (Patron) ரக்ஷகராய் இருந்து வருகிறார். ராஜாங்கத்திற்கும் பொதுஜனங்களுக்கும் சமாதான காலங்களிலும் அவர்கள் பலவழிகளிலும் உதவிபுரிகின்றார்கள். எவ்விதத்திலும் அப்பிள்ளைகள் மஹாசமர்த்தர்கள், பெரும் உழைப்பாளிகள், உத்தம குணமுடையோர், உபகாரச்செய்கை பொன்றேனும் செய்யாமல் அவர்களொருபோதுமிரார். இதிலேயே அவர்கட்குப் பெரும் உத்ஸாகம் உளது. அவர்கள் பௌருஷம் மிகவாய்ந்தவர்கள், ஈனமான காரியத்தை ஒருபோதும் செய்யார். எவ்வித கஷ்டம் தங்களுக்கு நேரிடினும் அதை யலக்ஷியஞ் செய்து எக்காலமும் புன்னகை கொண்டிருப்பார்கள். சுருட்டு புகையிலைகள் முதலியவற்றை அவர்கள் உபயோகிக்க மாட்டார்கள். எப்பொழுதும் அவர்கள் சுறுசுறுப்பும் தைரியமும் நற்சிந்தனையுங் கொண்ட வாலிபர்கள். அத்தகைய உத்தமமான வேலையைச் செய்துவரும் சங்கத்தைப் பற்றி நமது இந்திய சகோதரர்களுக்குத் தெரிந்திருப்பது மிகச் சொற்பமே.

இதைப்போலவே மேனாட்டில் கிறிஸ்தவ ஜனங்களுக்குள் ரக்ஷண்யசேனை என்ற கூட்டத்தார் கிறிஸ்தவமார்க்கப்

படியே செய்துவரும் உபகாரமான வேலைகள் மிகவும் வியக்கத்தக்கன. லண்டன் மாநகரத்தில் ஈஸ்ட் எண்ட் என்னும் அசுத்த களஞ்சியமென்று சொல்லக்கூடிய விடங்களிலும், மற்றும் மனிதர்கள் வசிக்கச் சற்றேனும் யோக்கியமில்லாத விடங்களிலும் அவர்கள் செய்துவரும் உபகாரமான வேலையையும் நமது ஹிந்து ஜனங்கள் நன்கு உணரவில்லை. கிறிஸ்தவ மார்க்க உண்மைகளை நம்பும்படியாய் பதிதர்களான ஜனங்களைச் செய்வதே அவர்கள் பஹிரங்கமான நோக்கமெனினும், மற்றோர்கள் முற்றிலும் அசட்டை செய்துவிட்டுப் போகும் முக்கியமான உபகார காரியங்களை அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் செய்கிறார்களென்று நாம் பார்க்குங்கால், அவர்களிடம் அருள் பூரணமாய் வாசஞ் செய்கின்றதென நாம் ஒப்பவேண்டியதுதான். திருடர்களையும், கொலைபுரிய அஞ்சாதவர்களையும், தாய்தந்தையற்ற ஜனங்களையும், பஞ்சத்திலடிபட்டவர்களையும் வியபிசாரஞ்செய்து தள்ளுண்டவர்களையும் காப்பாற்றவும் மீட்கவும் அவர்கள் செய்யும் பிரயத்தினங்கள் ஆண்டவனுக்கு அதிசம்மதமாகவே யிருக்கவேண்டும். நமது அன்பு முதிர்ந்தால் இத்தகைய காரியங்களுக்குக் குறைவில்லை.

இவையனைத்தையும் நாம் கவனிக்குங்கால், நமது தேசத்திலுள்ள பெரியோர்களும் வாலிபர்களுஞ் சேர்ந்து ஜனசமூகத்தின் நன்மைக்காகவே தனியாய் ஓர் புதிதானசங்கம் ஏற்படுத்த வேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. வாலிபர்களுடைய பெரும் ஊக்கத்திற்கும், வயதிலும் அநுபவத்திலும்முதிர்ந்தோர்களுடைய சக்திக்கும் இவ்விதம் ஓர் போம்வழி இருத்தல் வேண்டும்.

எப்பொழுதும் பரோபகாரம் புரியக் காத்திருக்குமொருவன், துக்கம், மனத்தளர்வு, அசுத்தமான எண்ணங்கள், காமக்குரோதம், கர்வம், சோம்பல் முதலியன தன்னிடம் அணுகாவண்ணம் பாதுகாத்துக் கொள்வான். ஏனெ

னில், அவனது சக்திகள் மேல்நோக்கிச் செல்கின்றன. அவன் ஓர் சமயம் சோதனைகட் குட்பட்டபோதிலும், பெரும் பிழைகளைச் செய்ய அவனுக்குத் துணிவு ஏற்படாது. பிற்காலத்திலாவது அவனுடைய பழைய நற்புத்தியும், உத்தம நோக்கமும் அவனுதவிக்கு வரும். இவ்விதமாவது அவன் தன்னையே மீட்கும்பொருட்டு பிரயத்தினப்படுவான்.

பிறரை நேர்வழிகளில் மகிழச்செய்வதே மெய்யான வாழ்வு. ஈசனுக்கும் அவ்விதஞ் செய்வோரிடமே கருணையுதிக்கும். ஜனங்கள் நமது காரியத்தைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் நற்கிருத்தியங்களென எவற்றை நாம் நினைக்கின்றோமோ அவற்றில் தைரியமாய் இறங்கி அவற்றைச் சாதிக்க முயல்வதே தீரர்களுடைய லக்ஷணமாம். ஆயினும், சாமானிய ஜனங்களுக்கோவெனின், தாங்கள் புரியும் உபகாரம் மற்றவர்களால் புகழப்படவேண்டுமென்ற அவா இருப்பது சகஜம். அத்தகைய ஜனங்களுக்கு (தற்காலத்தில் சற்று உபகாரமான வேலையைச்செய்பவர்கட்கு ராஜாங்கத்திலிருந்தே கௌரவ பட்டங்கள் கிடைப்பதுபோல்) "உழைப்போன்" "தொண்டு புரிவோன்" (Server) என்ற பட்டம் கிடைத்தால், அதைவிட மேலான கௌரவமுமுண்டோ? "அடியார்க்குமடியேன்" என்றபட்டம் மெய்யாகவே நமக்கு கிடைத்தால், அதுவே நம் பெரும்பாக்கியத்தின் ருசுவாகும்.

அவர்களுடைய உத்தியோகம், சக்தி, யுக்தி, செல்வாக்கு இவைகட்குத் தகுந்தவாறே ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உதவிபுரியக்கூடும். சிறு காரியங்களையும் பரோபகாரத்திற்கென உபயோகப்படுத்திக்கொள்ளும் யூகமுள்ளவர்கள் மற்றவர்கள் வீண்பொழுது போக்கும்பொழுது அந்தப்பொழுதைப் பிறர்க்குபகாரமான வழிகளிற் போக்க

யத்தனஞ் செய்வார். பழகின திருஷ்டியுள்ள சித்திரக்காரர்கள் ஓர் படத்தின் அழகையும், லாவண்ணியத்தையும் எவ்விதம் சாமானிய ஜனங்களைவிடத் திறமாய்க் கண்டறிய முடியுமோ, அவ்விதமே பரோபகாரமெனும் பெருமுயற்சியில் மிக்க பழக்கமுடையோர்க்கு, அல்பம் என்று சாதாரண ஜனங்கள் நினைத்து அலக்ஷியம் செய்துபோகும் விஷயங்களுங்கூடப் பெரிதாகத் தோன்றும். ஒரு கணமேனும் அவர்கள் வீண்பொழுது போக்கார். தங்களுடைய சுகத்தைச் சற்றும் கருதார். பிறர்க்குழைத்தலே பேரின்ப வாழ்வென அவர்கள் அறிந்தவர்கள். அவர்கள் வாழ்வின் பெருந்தன்மை உலகிலுள்ள பாஷண்டிகளுக்குத் தெரிவிப்பது யாதெனின் கபிலமஹாமுனிவர் முற்காலத்தில் உபதேசஞ் செய்ததுதான். அப்பெருமான் கூறுவார்:—

"உலகத்தீரே, உலகத்தீரே,
நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து,
சாற்றக் கேண்மின், சாற்றக் கேண்மின்.
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை
ஐம்பதிரவி லுயிலுந்து யிலினல்
ஓட்டிய விளமையி லோரைந்து நீங்கும்
எழுபது போக நீக்கிருப்பன முப்பதே.

(அவற்றுள்)

இன்புறு நாளுஞ் சிலவேயதா அன்று
துன்புறு நாளுஞ் சிலவே யாதலால்
பெருக்கா றொத்தது செல்வம்
பெருக் காற்றிடி கரையொத்த திளமை
இடிகரை வாழ்மர மொத்தது வாழ்நாள்
ஆதலால் ஒன்றே செய்யவும் வேண்டும்
ஒன்றும் நன்றே செய்யவும் வேண்டும்
நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்

இன்றும் இன்னே செய்யவும் வேண்டும்
நாளை நாளை யென்பீ ராகில்
நமனுடை முறை நாளாவது மறியீர்
நம்முடை முறை நாளாவது மறியீர்.''

இம்மஹா முனிவரின் உபதேசத்தை நாம் மனதிற் படியும்படி கிரகித்தால், உலகம் சுபம் பெறுமென்பதில் ஐயமில்லை. இச்சிறு காரியங்களில் நமது அன்பு முதிருங்கால் உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் லோககைங்கரியத்திற்கென நாம் தத்தம் செய்வோம். நமது அன்பின் மிகுதியாலும், ஈசனது அருட் பிரகாசத்தாலும், "நாம்", "தாம்" என்ற வுணர்ச்சி மாற்றமடைந்து, எவ்வுயிரும் ஈசனது உயிரேன நாம் மெய்யாகவே அறிவோம். அக்காலத்தில் இறைவனது அகண்ட ஞானத்திற்கும், சக்திக்கும், அன்பிற்கும் நாம் கால்வாய்களாக அமையலாம். அப்பெரும் பாக்கியம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடியதே. அப்பதம் பிற்காலத்தில் நமக்குக் கிட்டவேண்டுமென உண்மையில் நாம் விரும்பினுல், "பரகைங்கரியம்" "பரோபகாரம்" என்ற பாதையில் நமது பாதம் ஊன்றி நிற்றல்வேண்டும்.

ஓம் தத் ஸத்.

ஆர். பஞ்சாபகேச ஐயர்.

## வானச் சிறப்பு.

அமுதூறு மாமழை நீரத ஞலே
யமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
சமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
யமுதூறுங் காஞ்சிரை யாங்கது வாமே.

வரையிடை நின்றிழி வானீ ரருவி
யுரையில்லை யுள்ளத் தகத்துநின் றூறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை யெந்தைக் கழுமணி யாறே.

—திருமந்திரம் 248, 249.

உரை - குற்றத. எந்தைக் கழுமணியாறு - சிவபிரானுக்காட்டுதற்குரிய மேலான நீராம்.

## மிகச்சிறு குழந்தைகளுக்கு பிரஹ்மக்ஞானம்.*

### முதல் அத்தியாயம்

### ஜகத்பிதா.

---

குழந்தைகளே! நீங்கள் ஒரு வீட்டில் வசிக்கிறீர்கள், ஒரு குடும்பத்திலிருக்கிறீர்கள். உங்களைப் பாதுகாப்பதற்கு ஒரு தாய்தகப்பனிருக்கிறார்கள். அவர்கள் உங்களை நேசித்துக் கல்வி கற்பிக்கிறார்கள். அவர்கள் உங்களைவிட வயதில் அதிக மூத்தவர்களாக விருக்கிறார்கள். சிறு குழந்தைகளாகிய உங்களால் செய்ய முடியாத பெரிய வேலைகளையெல்லாம் எப்படிச்செய்வதென்று அவர்களுக்குத்தெரியும். அவர்கள் சில சமயங்களில் உங்களுக்கு அந்த வேலைகளைச் செய்து காட்டுகிறார்கள். தாய் தகப்பனைப்போல அவ்வளவு நன்றாக உங்களுக்குச் செய்யத் தெரியாதபோதிலும் உங்களால் கூடிய வரை அவர்களைப்போல நீங்கள் செய்ய முயலுகிறீர்கள். பிதாவானவர் உங்களைப் பாதுகாப்பதோடு நீங்களெல்லோரும் வசிப்பதற்கு நேர்த்தியான வீட்டையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார். வீட்டில் தாயானவள் உங்களைப்பற்றிக் கவலை யெடுத்துக்கொள்ளுகிறாள். உங்களுக்கு அநேக விஷயங்களைக் கற்பிக்கிறாள். உங்களுக்கு ஒத்தாசை செய்கிறாள். உங்களிடம் அன்பாக இருக்கிறாள். நீங்கள் அசௌக்கியமாகவாவது விசனமாகவாவது இருந்தால் உங்களை எப்படிச் சௌக்கியப்படுத்துகிறதென்றும் சந்தோஷப்படுத்துகிறதென்றும் மற்றவர்களைக்காட்டிலும் உங்கள் தாயார் நன்றாக அறிந்துகொண்டிருக்கிறாள்.

இப்பொழுது, உலகத்திலுள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தாய் தகப்பனிருக்கிறார்கள். அப்படியானால் இந்த எல்லாக் குடும்பங்களையும் அதிலுள்ள தாய்தகப்பன்மார்களையும் குழந்தைகளையும் ஒருங்கே பாது

---

* Adapted from the "Young Age," London (Theosophy for very little children by C. M. Codd)

காப்பதற்கு ஒருவருமில்லையாவென்று நீங்கள் எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? உலகத்தில் எவ்வளவு குடும்பங்கள் இருக்கின்றன வென்று பார்ப்போம். ஆ! ஆ? கணக்கிட முடியாத ஜனங்கள்! இவர்களெல்லோரையும் சதாகாலமும் பிரியத்தோடு பாதுகாத்து, எந்த வேளையிலும் இவர்களுக்கு ஒத்தாசை செய்பவர் ஒருவரில்லையா? ஆம், ஒருவரிருக்கிறார். ஜகத்திலுள்ள எல்லோருக்கும் அதாவது உங்களுக்கும், எனக்கும், நம்தாய் தகப்பன்மாருக்கும், சகல மிருகங்களுக்கும், எல்லாப் புஷ்பங்களுக்கும்,மரங்களுக்கும், சிறுவர்களுக்கும்,பெரிய பரமபிதாவாயுள்ள ஒருவர் இருக்கிறார். இவர்களெல்லோரும் அவருடைய வீட்டில் வசிக்கிறார்கள். அவரே இவர்களெல்லோரையும்பார்க்கிறார். உலகந்தான் அவருடையவீடு. அதிலிருக்கிற சகலவஸ்துக்களும் அ தா வ து சகலஜனங்களும், சகல மிருகங்களும், சகல புஷ்பங்களும் அவருடைய குழந்தைகள். அவருக்குச் சொந்தமில்லாதவர் ஒருவருமில்லை; எல்லோரும் அவருடைய பிள்ளைகளே; அதனால் தான் அருடைய வீட்டில் வசிக்கிறார்கள். அது ஒரு அழகிய வீடல்லவா? அதில் நாம் எவ்வளவோ சகோதரர்களையும் சகோதரிகளையும் அடைந்திருக்கிறோம். நமது சகோதர சகோதரிகளிற் சிலர் அப்பெரிய பரமபிதாவின் வீட்டில் சிறு குழந்தைகளைப் போலக் காணப்படுகிறார்கள். சில சிறு பூனைக்குட்டிகளைப் போலவும், புற்களுக்கு நடுவிலுள்ள சிறு புஷ்பங்களைப்போலவும் அவ்வளவு சிறுஜந்துக்களாகவிருக்கிறார்கள்.

நம்முடைய பரமபிதாவைத் தெரிந்துகொள்வதற்கு பலர் அவரைப் பல பெயர்களால் அழைக்கிறார்கள், நாம் அவரைக் கடவுளென்று சொல்லுகிறோம். நம்முடைய பாஷையில் பேசாத வெகுதூரத்திற் கப்பால் அநேகதேசங்களிலுள்ள பல ஜனங்கள் அவரை வேறொரு பெயரால் அழைக்கிறார்கள். எல்லோரும் அவருக்குப் பெயர் வைத்தி

ருக்கிறார்கள். மிருகங்களும் புஷ்பங்களுந்தான் ஒரு வேளை அவருக்குப் பெயர் சொல்லி அழைக்காமலிருக்கலாம். அவர் இருக்கிறாரென்று மட்டும் அவைகளறியும்.

அவர் எங்கே வசிக்கிறாரென்று தெரியுமா? அவருடைய பெரிய வீட்டில் எங்கும் ஏககாலத்தில் அவர் வசிக்கிறார். இப்போது நம்மால் அவரைப்பார்க்கமுடியாது. இனிவருங் காலங்களில் வெகு நீண்டகாலத்திற்குப் பிறகு நாம் அவரைக் கட்டாயம் பார்ப்போம். ஆனால் இப்பொழுது அவரை உணர்ச்சியாலறியவும் அவரைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் கூடும்.

உங்களுடைய தாயார் சில சமயங்களில் தன் கைகளில் உங்களை எடுத்துக்கொள்வதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். தாயாருடைய கைகள் உங்களைச் சுற்றித் தழுவிக்கொண்டிருக்கும்பொழுது உங்களுக்கு எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது. அதேமாதிரி கடவுளுடைய கைகளும் அவருடைய உலகத்திலுள்ள அவர் குழந்தைகளை தழுவிக்கொண்டிருக்கின்றன. அவ்விதமிருப்பதை அக்குழந்தைகள் சில சமயம் அறியமுடியாது. சில வேளைகளில் அவர்கள் துக்கமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அப்படி வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதால் அவர்களின் பரமபிதாவை மறந்து அவர் செய்யக்கூடாதென்று மறுத்திருக்கும் காரியங்களைச் செய்கிறார்கள். அவரை மறக்காமலிருந்தால் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யமாட்டார்கள்.

அதற்காக நம்மிடம் அவர் வைத்திருக்கும் அன்பைக் கடவுள் மாற்றிவிடுகிறதில்லை. நாம் அவரை எவ்வளவுக்கெவ்வளவு மறந்து துக்கத்திற்குள்ளாகிறோமோ, அவ்வளவுக்சவ்வளவு அவர் நம்மிடம் அதிக அன்பாக இருக்கிறார். "நான் அவர்களுக்கு மறுபடி ஞாபகம் மூட்டவேண்டும் அப்போது அவர்கள் சந்தோஷமாயிருப்பார்களென்று" அவர் சொல்லுகிறார்.

எல்லா விஷயங்களையும் எப்படி அழகாகச் செய்கிறதென்று உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் அவர்தான் கற்பிக்கிறார். உங்களை எப்படி நேசிக்கிறதென்று உங்கள் தாய்மார்களுக்கு அவர்தான் கற்பிக்கிறார். கெட்டிக்காரர்களாகவிருந்து கடினமான வேலைகளைச் செய்து உங்களுக்கு எப்படி உதவி செய்கிறதென்பதை உங்கள் தகப்பன்மாருக்கு அவர்தான் கற்பித்திருக்கிறார். சில வேளைகளில் அவர் உங்களுக்குங்கூட அதைச் சொல்லுகிறார் நீங்கள் விரும்பினால் கடவுள் உங்களோடு எப்பொழுதும் பேசுவார்.

உங்களுடைய இருதயங்களில் நல்ல எண்ணங்களை அவர்தான் உதிக்கச் செய்கிறார். நீங்கள் ஒருவரை அதிகமாக நேசிக்கும் பொழுதும் எவருக்காகவாவது ஒத்தாசை செய்ய விரைந்து செல்லும் பொழுதும் அவருடைய தூண்டுதலினால் தான் அதைச் செய்கிறீர்கள். அவர் சொல்லுகிறதாவது:—"மழைபெய்வதால் குழந்தை சுந்தரம் விளையாட வெளியேபோகமுடியவில்லை, அதற்காக அவள் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாள், நீபோய் அவளோடு விளையாடி அவளைச் சிரிக்கும்படி செய்வாயா?" என்று உன் இருதயத்தில் இரகசியமாகச் சொல்லுகிறார். அப்பொழுது உன் இருதயமானது, "அன்பான கடவுளே ஆகட்டும், நான் அப்படியே செய்கிறே"னென்று சொல்லிற்று. ஆகையினால் தான் அப்படிச் செய்தாய். நீங்கள் எப்போதாவது கோபமாகவும், பக்ஷமின்மையாகவும் இருப்பீர்களானால், அந்த நிமிஷத்தில் அவரை முற்றிலும் மறந்திருக்கிறீர்களென்பது நிச்சயம். ஆகையினாலேதான் அவர் சொல்வதை உங்களாற் கேட்கமுடியவில்லை.

குமரப்ப செட்டியார்.

---

# புத்தகவரவு

---

ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதங்கள்—மொழிபெயர்ப்பாசிரியர் சுப்பிரமணியசிவம்—ஞானபாநு கார்யஸ்தலம், மைலாப்பூர். சென்னை. விலை அணா ½. இது ஒரு சிறுபுத்தகம். விவேகாநந்தரின் அழகிய சிறு படமும், அம்மகானுடைய சரித்திரச் சுருக்கமும் தலைப்பில் கொண்டிருக்கின்றது. ஸ்வாமியவர்கள் எழுதிய 15 லட்டர்களின் மொழிபெயர்ப்பு அடங்கியிருக்கிறது. வியாசங்களையும் பெரும் கிரந்தங்களையும் வேறுபாஷையில் மொழி பெயர்ப்பதைக் காட்டிலும் கடிதங்களை மொழிபெயர்ப்பது சிறிது சிரமசாத்தியமாகும். ஆயினும் மொழி பெயர்ப்பாசிரியர் மிக்க ஊக்கத்துடன் கூடிய மட்டில் தெளிவாய் மொழிபெயர்த்திருக்கிறார். விவேகாநந்தரின் லட்டர்கள் மிகவும் கம்பீரமாயும் மனோதிடமுள்ளமையாயும் மாதிருபூமி விசுவாசம் நிறைந்தவையாயும் இருக்கின்றன. அவைகளை ஆங்கிலத்திலுள்ள தார்டியத்துடன் தமிழில்மொழிபெயர்த்தலரிது. மீதமுள்ள கடிதங்களையும் மொழிபெயர்க்க அவாவினராயுள்ள ஆசிரியரவர்கள் கூடியசீக்கிரத்தில் தன் எண்ணத்தை நிறைவேற்றுவார் என்று நம்புகிறோம்.

---

ஸ்ரீ காயத்ரீபாஷ்யம்—வித்யாரண்ய ஸ்வாமிகளால் அருளிச்செய்யப்பட்டது. காளையார்கோவில் ராமபத்ரதீக்ஷிதர் அவர்களால் வெளியிடப்பட்டது. விலை 1½ அணா. கிரந்த லிபியில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதில் காயத்ரீதத்வமும், ஆத்தமும், ஜபம், காலம், ஜபம் செய்யும் விதம், பலம், அதிகாரி எல்லா விஷயங்களும் மிகவும் நன்றாக ஸம்ஸ்கிருதபாஷையில் விளக்கியுள்ளது. அப்பாஷையறிந்த விப்ரர் எல்லோரும் கவனித்து சிரத்தையாய் வாசித்து மனனம் செய்தால் மிக்க பயனடைவார்கள். "தேவனான ஸவிதாவினுடைய பர்கமென்று பெயரையுடைய பரபிரஹ்மஸ்வரூபமான தேஜஸானது சிந்திக்கத் தகுந்தது. என்னுடைய ஹிருதயகமலத்திலிருக்கும் அந்த பர்கமென்ற தேஜஸினால் தூண்டப்பட்டவனான நான், பூலோகம், அந்தரிக்ஷம், சுவர்க்கம் முதலிய பிரஹ்மாண்டத்தின் உதரத்திலிருக்கிறதும் சராசரத்ரைலோக்ய ஸ்வரூபமாயும் என்னுடைய ஹிருதயத்தின் உள்ளும் புறமும், ஸூர்யமண்டலத்தின் மத்தியிலும் இருக்கிற தேஜஸாக விருக்கிற பரப்ரஹ்ம ஸ்வரூபமான ஜ்யோதிஸ்தான் என்று ஜபம் செய்யவேண்டும்" என்று காயத்ரீமஹாமந்திரத்தின் பொருள் நன்குவிளக்கப்பட்டிருக்கிறது. த்ரிகாலத்திலும் காயத்ரீயை ஜபம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறபடி அநுஷ்டானம் செய்யவேண்டியது விப்ரரின் முதற்கடமையாம். அர்த்தம் தெரியாமல் மந்திரத்தை ஜபித்தல் கூட பயனற்றதல்லவாயினும், அர்த்தம் தெரிந்து ஜபித்தல் பலகோடி மடங்கு சிலாக்கியமாகையால் இப்புத்தகம் வெளியிட்டவர் மிக்க சற்கர்மம் செய்தவராகிறார்.

---

# பத்திரிகை வரவு.

---

தமிழ்ப்பெருமாட்டி. இராக்ஷச வருஷம் பங்குனிமாதம் முதல் சென்னை தங்கசாலைத்தெருவு 390 நெம்பர் வீட்டில் தமிழ்ப்பெருமாட்டிக் கழகத்தாரால் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. செந்தமிழ் மொழியை வளர்ப்பதற்காக பிரசுரம் செய்யப்பட்ட ஓர் உயர்ந்த பத்திரிகை. முதல் சஞ்சிகையானது அரிய விஷயங்களைப் பற்றிய வியாசங்களால் நிரம்பியது. வைஷ்ணவ சம்பிரதாயத்தைப் பற்றியும் பஞ்சாக்ஷரமகிமையைப் பற்றியும் வியாசங்களும், ஆயுர்வேதம் ஜோதிடம், வியவசாயம் முதலிய விஷயங்களைப்பற்றி வியாசங்களும் சில கதைகளும் நாடகங்களும் இன்னும் இனிய பல விஷயங்களும் இச்சஞ்சிகையில் காணப்படுகின்றன. இதன் போலவே சிலாக்கியமாக மற்றசஞ்சிகைகளும் தொடர்ந்து நம் தமிழ்நாட்டுக்கு பேருபகாரம் புரிய முன் வந்திருக்கும் தமிழ்ப்பெருமாட்டிக்கு மனமுவந்து நல்வரவு கூறுகின்றனம்.

---

ஜனோபகாரி—வேலூர். R. நாராயணசாமி முதலியார் அண்டு கம்பெனியாரால் நடத்தப்பட்டுவருகிறது. 1-வது புஸ்தகம் 5, 6 நிர் சஞ்சிகைகள்—கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில் ஆகிய பலவிஷயங்கள் அடங்கிய மாதாந்தப் பத்திரிகை இந்த மாதாந்தப் பத்திரிகையில் தோன்றும் வியாபாரம் கைத்தொழில் முதலிய விஷயக் குறிப்புகளும் வியாசங்களும் பொது ஜனங்களுக்கு மிகவும் பிரயோஜனமானவை. 'செயந்நன்றியறிதல்' 'ஔவை' முதலிய வியாசங்களும் நன்ருய் எழுதப்பட்டிருக்கின்றன. நம்நாட்டின் அபிவிருத்திக்காக உழைத்து வரும் பத்திரிகைளின் சங்கை அதிகரிப்பதைப் பாாக்கச் சந்தோஷிக்கிருேம்.

---

வர்த்தகமித்திரன் — வர்த்தகர்களுக்கும் தரகர்களுக்கும் மிகவும் உபயோகமுள்ள ஓர் பத்திரிகை மாதம் இருமுறை வெளிவருகிறது. வர்த்தகர்கள் ஆதரிப்பார்களானல் வாரம் ஒருமுறை வெளியிடுதல் அதிக பயன் தரக்கூடியது.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

### விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான் !!

### குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, காய் பூரான், செய்யான், பாம்பு, நண்டே. இறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துகள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொ வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ அ பை |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ | 0—8—0 |
| டசன் 1-கு ரூ | 5—0—0 |

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

**Conklin's**
**Self-Filling**
**Fountain Pen**

# CONKLIN'S SELF FILLING FOUNTAIN PEN.



**No. 20 NL. Price Rs. 7/14.**



**No. 20 PNL. (Pocket Size) Price Rs. 7-14-0**

Do you know what a Conklin's is? It is the only **PERFECT SELF-FILLING** Fountain Pen of 16 years' proven merit: You know it by the *Crescent Filler*. Refuse substitutes for they are only imitations :

Can be had of all Stationers,

*or*

Sole Agents.

**The City Paper Mart,**
**MADRAS.**